# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 8

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

April 2017 | தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் | விலை ரூ 5


பொருளடக்கம்


- சோவியத் யூனியனின் வரைவு அமைப்புச் சட்டம் . . . பக்கம் 1
- தேர்தலுக்கு அரசு நிதி . . . பக்கம் 3
- பழிவாங்கப்பட்டிருக்கும் மாருதி தொழிலாளர்களுக்கு . . . பக்கம் 8
- போராடும் தமிழக விவசாயிகளுக்கு . . . பக்கம் 8




## வரலாற்றுச் சிறப்புமிக்க ஏப்ரல் 24 நீடூழி வாழ்க!

*"ஒரு கட்சி உன்னதமான தத்துவங்களைப் பற்றி பேசுகிறதா இல்லையா என்பது அவ்வளவு முக்கியமல்ல. அக்கட்சி போதிக்கும் தத்துவம் உண்மையிலேயே உன்னதமானதா இல்லையா என்பதை நிரூபிப்பது அக்கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் ஆதரவாளர்களும் உயர்ந்த நெறிகளையும் கலாச்சாரத்தையும் தங்கள் சொந்த வாழ்க்கையிலும் அன்றாட நடவடிக்கைகளிலும் அரசியல் பணிகளிலும் பிரதிபலிக்கிறார்களா இல்லையா என்பதுதான்"*

**சிப்தாஸ் கோஷ்**

# சோவியத் யூனியனின் (யுஎஸ்எஸ்ஆர்) வரைவு அமைப்புச் சட்டம் குறித்து மாபெரும் ஸ்டாலின்

வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டை அனுஷ்டிக்கும் கடமையை எமது கட்சி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எடுத்துள்ளது. வருட முழுவதும் அனுஷ்டிப்பதென முடிவு செய்யப்பட்டதற்கேற்ப, அதன் துவக்க நிகழ்ச்சி கடந்த **2016** நவம்பர் **7**ம் தேதி டெல்லியில் நடைபெற்றது. இவ்வனுஷ்டிப்பின் ஒரு பகுதியாக மாபெரும் நவம்பர் புரட்சியின் உள்ளடக்கம் (சிறப்புக்கள்) குறித்தும் புரட்சிக்கு இட்டுச்சென்ற செயற்போக்கின் சுருக்கமான வரலாறு குறித்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒருசில ஆவணங்களை வெளியிடுவதென நமது மத்திய ஆங்கிலப் பத்திரிகையான புரொலிடேரியன் ஏரா முடிவு செய்துள்ளது. அதுபோன்ற ஆவணங்களில் ஒன்றே நாம் கீழ்காண்பது.

**1936** டிசம்பர் **5**, உலகில் சோசலிசம் தோன்றி ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றின் குறிப்பிடத்தக்க ஒரு மிகச்சிறந்த நாளாகும். இந்நாளில்தான் முன்னாள் யுஎஸ்எஸ்ஆர் (யூனியன் ஆஃப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்ளிக்) ஆன சோவியத் யூனியனானது மாபெரும் ஸ்டாலின் தலைமையின்கீழ் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி ஏற்றுக் கொண்டது. அது ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டமாக இருக்கவில்லை. விரைவிலேயே "ஸ்டாலின் அரசியலமைப்புச் சட்டம்" எனவும் உலகப் புகழ்பெற்றது; அது மனித இன வரலாற்றின் ஒரு புதிய சகாப்தத்திற்குள் நுழைகின்ற மக்களின் கனவுகள் அபிலாஷைகளின், உரிமைகள் பொறுப்புக்களின் ஒரு வாழும் உருவகமாகத் திகழ்ந்தது. **1936** நவம்பர் **25**ல் யுஎஸ்எஸ்ஆரின் சோவியத்துக்களின் 8வது காங்கிரஸில் மாபெரும் ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட அறிக்கையானது, யுஎஸ்எஸ்ஆரின் வரைவு அரசியலமைப்பு குறித்த ஒரு விரிவான விவாதமாகும். அவ்வறிக்கையில் ஸ்டாலின் முன்வைத்தவற்றின் தேர்ந்தெடுக்கப் பட்ட சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

"தோழர்களே, யுஎஸ்எஸ்ஆரின் சோவியத்துக் களின் 7வது காங்கிரஸின் சிறப்பு முடிவின்படி அரசியலமைப்புச் சட்ட கமிஷன் . . . அமைக்கப் பட்டது. டிசம்பர் **6, 1935**ல் இம்முடிவு ஏற்கப்பட்டது. அது கூறுவதாவது:

**1)** யூனியன் ஆஃப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்ளிக்கின் அரசியலமைப்புச் சட்டம் கீழ்காணும் திசைவழியில் திருத்தப்பட வேண்டும்:

அ) அனைவருக்கும் சமமான வாக்குரிமை இல்லாதிருப்பதை, அனைவருக்குமான சமமான வாக்குரிமையாலும் மறைமுகத் தேர்தலை நேரடித் தேர்தலாலும் பகிரங்க வாக்கை ரகசிய வாக்காலும் மாற்றியமைப்பதன் மூலம் தேர்தல் முறையை மேலும் ஜனநாயகப்படுத்துவது;

ஆ) சோவியத் யூனியனில் தற்போது (புதிய சோசலிச தொழில்களை ஏற்படுத்தியது, குலாக்குகள் (பணக்கார விவசாயி) வர்க்கத்தை அழித்திட்டது, கூட்டுப்பண்ணை முறையின் வெற்றி, சோவியத் சமூகத்தின் அடிப்படையாக சோசலிச பொது உடமையை ஸ்திரப்படுத்தியது மற்றும் பிற) நிலவுகின்ற வர்க்க சக்திகள் உறவுகளுடன் பொருந்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் சமூக மற்றும் பொருளாதார அடிப்படைக்கு மிகவும் துல்லியமான வரையறையை தருவது.

**2)** ஒரு அமைப்புச்சட்ட கமிஷனை தேர்வு செய்வதற்கு சோவியத் யூனியனின் மத்திய செயலாக்கக் கமிட்டிக்கு அதிகாரமளிப்பது. அத்தகைய அமைப்புச்சட்ட கமிஷனானது, உட்பிரிவு **1**ல் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளுக் கேற்ப, அமைப்புச்சட்ட திருத்த வரைவுகளை தயாரித்து சோவியத் யூனியன் குடியரசின் மத்திய செயலாக்கக்கமிட்டியின் ஒரு அமர்வில் ஒப்புதலுக்காக அவற்றை சமர்ப்பித்திடுவது.

தொடர்ச்சி 2ம் பக்கம்

# குடிநீர், ரேஷன் பொருட்கள் தட்டுப்பாடு நீக்க, வறட்சி நிவாரணம் கோரி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆர்ப்பாட்டங்கள்




சென்னையில் ஏப்ரல் 03, 2017




தேனியில் ஏப்ரல் 03, 2017




மதுரையில் ஏப்ரல் 04, 2017

# சோவியத் யூனியனின் (யுஎஸ்எஸ்ஆர்) வரைவு அமைப்புச் சட்டம் குறித்து மாபெரும் ஸ்டாலின்

1ம் பக்கத் தொடர்ச்சி

3) சோவியத் யூனியன் தேர்தல் அமைப்பின் அடிப்படையில் சோவியத் ஆட்சியின் கீழ்வரும் அங்கங்களின் அடுத்த சாதாரண தேர்தலை நடத்துவது"

இவ்வாறாக, அமைப்புச்சட்ட கமிஷனானது 1924லிலிருந்து இன்றுவரையில் சோவியத் யூனியனின் வாழ்வில் சோசலிசத்தின் திசைவழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கில் கொண்டு, 1924ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட, தற்போது நடைமுறையில் உள்ள அமைப்புச்சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதாக அமைந்தது.

தேசியங்களுக்கிடையிலான பகைமையின் பிரதான அமைப்பாளர்களான சுரண்டும் வர்க்கங்கள் இல்லாமை; பரஸ்பர அவநம்பிக்கையையும் தேசிய வெறித்தனத்தையும் தூண்டிவிடக் கூடிய சுரண்டல் இல்லாமை; அனைத்துவகை அடிமைத்தனத்தின் பகைவனாக, சர்வதேசியவாத கருத்தின் உண்மையான வாகனமாக திகழ்கின்ற பாட்டாளி வர்க்கத்தின் கரங்களில் அதிகாரம் இருக்கிறதென்ற உண்மை; யதார்த்த நடைமுறையில் பொருளாதார, சமூக வாழ்வின் அனைத்து களங்களிலும் மக்களிடையே நிலவும் பரஸ்பர உதவி; இறுதியாக, சோவியத் யூனியனின் பல்வேறு மக்களிடையேயான வடிவத்தில் தேசியத்தன்மையுடையதும் உள்ளடக்கத்தில் சோசலிசமுமாக நிலவும்–தேசிய கலாச்சாரத்தின் மலர்ச்சி ஆகிய இவையனைத்தும் மற்றும் இதுபோன்ற அம்சங்களும் சோவியத் மக்களிடையே அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கின்றன; பரஸ்பர அவநம்பிக்கை உணர்வு மறைந்திருக்கிறது, அவர்களிடையே பரஸ்பர நட்புணர்வு வளர்ந்திருக்கிறது, இவ்வாறு ஒற்றை கூட்டாட்சி அரசமைப்பிற்குள் மக்களிடையே உண்மையான சகோதரத்துவ ஒத்துழைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, அனைத்து பரிசோதனைகளையும் தாக்குபிடித்த, அதன் நிலைத்தன்மை குறித்து உலகின் எந்த பகுதியின் எந்த தேசிய அரசும் பொறாமை கொள்ளத்தக்க ஒரு முழுமையான பல தேசிய சோசலிச அரசை தற்போது நாம் பெற்றுள்ளோம்....

1924இன் அரசியலமைப்புச் சட்டத்தின் உரையை திருத்துவதற்காக அரசியலமைப்புச் சட்ட கமிஷன் அறிவுறுத்தப்பட்டது. ...புதிய அரசியலமைப்பு வரைவதில் ஒரு அமைப்புச்சட்டம் என்பது ஒரு திட்டத்துடன் (programme) குழப்பிக் கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தில் அரசியலமைப்புச் சட்ட கமிஷன் தன் பணியை முன்னெடுத்தது. இதனர்த்தம் ஒரு திட்டத்திற்கும் ஒரு அரசியலமைப்பிற்குமிடையே ஒரு வேறுபாடு இருக்கிறதென்பதாகும். ஒரு திட்டமானது இதுவரை இல்லாததை, இனிமேல் நிறைவேற்றப்படப்போவது குறித்து, எதிர்காலத்தில் வெல்லப்போவதை குறித்து பேசுகிறது. மாறாக, ஒரு அரசியலமைப்பானது ஏற்கெனவே இருப்பது குறித்து, ஏற்கெனவே வென்றெடுக்கப்பட்டவை குறித்து, தற்போதுள்ளதைக் குறித்து பேச வேண்டும். ஒரு திட்டமானது முக்கியமாக எதிர்காலம் குறித்து விவாதிக்கிறது, ஒரு அரசியலமைப்பு தற்காலம் குறித்து விவாதிக்கிறது.

விளக்கத்துடன் இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்:

நமது சோவியத் சமூகம் பிரதானமாக, சோசலிசத்தை அடைவதில் ஏற்கெனவே வெற்றி பெற்றிருக்கிறது; அது சோசலிச அமைப்பை உருவாக்கியிருக்கிறது, வேறுவார்த்தைகளில் கூறுவதானால், மார்க்சிஸ்டுகள் வேறு வார்த்தைகளில் அழைக்கக்கூடிய கம்யூனிசத்தின் முதல் அல்லது கீழ் கட்டத்தை கொண்டுவந்திருக்கிறது. எனவே பிரதானமாக, நாம் ஏற்கெனவே சோசலிசத்தை, அதாவது கம்யூனிசத்தின் முதல் கட்டத்தை அடைந்திருக்கிறோம். ...கம்யூனிசத்தின் இந்தக் கட்டத்தின் அடிப்படை கோட்பாடானது, உங்களுக்கெல்லாம் தெரியும், "ஒவ்வொருவரிடமிருந்து அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் வேலைக்கேற்ப" என்பதேயாகும். சோசலிசம் அடைந்துள்ள இந்த உண்மை நிலையை நமது அமைப்புச்சட்டம் பிரதிபலித்திட வேண்டுமா? இந்த சாதனையின் அடிப்படையில் அது இருக்க வேண்டுமா? கேள்விக்கிடமின்றி அது அப்படித்தான் இருக்கவேண்டும்... சோவியத் யூனியனுக்காக சோசலிசம் ஏற்கெனவே சாதித்து வென்றிருக்கின்றது.

சோவியத் சமூகமானது எதிர்காலத்தில் "ஒவ்வொருவரும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப" என்ற கோட்பாட்டைக்கொண்ட கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்தை அடைவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலும் அந்த உயர்ந்த கட்டத்தை இன்னும் அடையவில்லை. தற்போது இல்லாத, ஆனால் எதிர்காலத்தில் அடையவேண்டியிருக்கின்ற கம்யூனிசத்தின் உச்ச கட்டத்தின் அடிப்படையில் நமது அரசியலமைப்புச்சட்டம் இருக்க முடியுமா? இல்லை, அவ்வாறு முடியாது. ஏனெனில் யுஎஸ்எஸ்ஆரில் கம்யூனிசத்தின் உச்ச கட்டம் எய்தப்படவில்லை, எதிர்காலத்தில் எய்தப்பட வேண்டும். ஒரு திட்டமாக அல்லது எதிர்காலத்தில் சாதிப்பதற்கான அறிவிப்பாக அது மாற்றப்பட வேண்டியதில்லையெனில் அது முடியாது. (PP 806 - 807)

...பூர்ஷ்வா அரசியலமைப்புச் சட்டங்கள் குடிமக்களின் முறையான உரிமைகளை அறிவிப்பதோடு முடிவடைந்துவிடுகின்றன. அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிலைமைகள் குறித்தோ, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தோ, அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் குறித்தோ கவலைப்படுவதில்லை. ...புதிய வரைவு அரசியலமைப்புச் சட்டத்தின் வேறுபாடு என்னவென்றால், குடிமக்களின் முறைப்படியான உரிமைகளை அறிவிப்பதோடு அது முடிந்துவிடுவதில்லை, மாறாக, இவ்வுரிமைகளின் உத்திரவாதத்தை இவ்வுரிமைகள் எந்தவழிமுறைகள்மூலம் நிறைவேற்றப்படும் என்பதை வலியுறுத்துகிறது. ...எனவே, புதிய அரசியலமைப்புச் சட்ட வரைவின் ஜனநாயகமயமென்பது "சாதாரண"மானதோ "அனைவராலும் அங்கீகரி"க் கப்பட்டதல்ல, மாறாக அது சோசலிச ஜனநாயகமயமாகும்...

...இவ்வரைவு அவ்வளவுவொன்றும் சுவாரஸ்யமானதாகயில்லை, ஏனெனில் ...வெறுமனே காகிதத்தில் எழுதப்பட்டவொன்று... வெற்று வாக்குறுதிகளை, மக்களை ஏமாற்றும் உள்நோக்கங் கொண்டது... என சில விமர்சகர்கள் கருதுகிறார்கள். இத்தகைய விமர்சனங்களின் மிகச்சரியான பிரதிநிதி ஜெர்மன் அரசுசார்பு பத்திரிகையான Deutsche Diplomatisch-Politische Korrespondenz ஆகும்.

1917ல் யுஎஸ்எஸ்ஆர் மக்கள், பூர்ஷ்வாக்களை தூக்கியெறிந்து பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி, சோவியத் ஆட்சியதிகாரத்தை ஏற்படுத்தினர். இது வாக்குறுதியல்ல, உண்மை. மேலும், சோவியத் ஆட்சியதிகாரம் நிலப்பிரபு வர்க்கத்தினை அப்புறப்படுத்தி முன்பிருந்த நிலப்பிரபுக்கள், அரசாங்கம் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான 15 கோடிக்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்களை விவசாயிகளுக்கு அவர்களிடம் ஏற்கெனவேயிருந்த நிலங்களுக்கும் மேலாக கைமாற்றியது. இது வாக்குறுதியல்ல, உண்மை.

மேலும், சோவியத் ஆட்சியதிகாரமானது முதலாளிவர்க்கத்தை அகற்றியது ...இது உண்மை, வாக்குறுதியல்ல.

மேலும், புதிய, சோசலிச வழியில், ஒரு புதிய தொழில்நுட்ப அடிப்படையில் தொழிற்சாலையும் விவசாயமும் அணிதிரட்டப்பட்டு, ...போருக்கு முன்பு ஒப்பிடுகையில் தேசிய வருமானம் நான்கு மடங்கு அதிகரித்தது. இவையெல்லாம் உண்மை, வாக்குறுதியல்ல.

மேலும், சோவியத் ஆட்சியதிகாரமானது வேலையின்மையை அகற்றியது, வேலைசெய்யும் உரிமையை அறிமுகப்படுத்தியது, ஓய்வெடுக்கவும் பொழுதுபோக்கவுமான உரிமை, கல்விபெறும் உரிமை, தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகளுக்கு பொருள்ரீதியான கலாச்சார ரீதியான மேம்பட்ட நிலைமையை அளித்தல், அதன் குடிமக்களுக்கு ரகசிய வாக்களிப்புடன் அனைவருக்குமான, நேரடியான, சமமான வாக்குரிமை அறிமுகப்படுத்தப்படுவதை உறுதியளித்தது. இவையெல்லாம் உண்மை, வாக்குறுதியல்ல...

இறுதியாக, மற்றொரு விமர்சக குழுவும் இருக்கிறது. முன்னர் சொல்லப்பட்ட குழுவானது, வரைவு அரசியலமைப்புச்சட்டம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை கைவிடுகின்றதென குற்றஞ் சாட்டுகிறது. மாறாக, இப்போது குறிப்பிட்ட மற்றொரு குழுவானது பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கு பங்கமேற்படுத்திடாமல், அரசியல் கட்சிகளுக்கு சுதந்திரம் வழங்கிடாமல், சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய முன்னணி நிலையை அப்படியே தக்கவைத்துக்கொண்ட நிலைமையில் எதுவும் மாற்றவில்லையென குற்றம் சாட்டுகின்றது. சோவியத் யூனியனில் அரசியல் கட்சிகளுக்கு சுதந்திரம் கொடுப்பதில்லை ஜனநாயகத்தின் கோட்பாடுகளை மறுப்பதின் அறிகுறியென இந்த குழு விமர்சித்துள்ளது.



பாட்டாளிவர்க்க சர்வாதிகார ஆட்சியையும் அதேபோல சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய தலைமைதாங்கும் நிலையையும் புதிய அமைப்புச் சட்டத்தின் வரைவு எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பராமரிப்பதை நான் ஒத்துக்கொண்டேயாகவேண்டும்... வரைவு அமைப்புச் சட்டத்தின் ஒரு தோல்வியென பெரு மதிப்பிற்குரிய விமர்சர்கள் இதை கருதினால், அதுதான் வருத்தத்திற்குரியது. போல்ஷிவிக்குகளாகிய நாம் இதை வரைவு அமைப்புச் சட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம் என கருதுகிறோம்.

பல்வேறு அரசியல் கட்சிகளுக்கான சுதந்திரம் பற்றி நாம் சற்று வேறுபட்ட பார்வையில் கடைபிடிக்கின்றோம். ஒரு கட்சி என்பது ஒரு வர்க்கத்தினுடைய பகுதியாகும், அதன் மிகுந்த முன்னேறிய பகுதியாகும். பரஸ்பர விரோதமும் ஒத்துப்போகவே முடியாத நலன்களுமுடைய எதிரெதிர் வர்க்கங்களைக்கொண்ட ஒரு சமுதாயத்தில் மட்டுமே பல கட்சிளும், அதோடு கட்சிகளின் சுதந்திரம் என்பதும் இருக்க முடியும் அவ்வாறான வர்க்க சமுதாயத்தில் முதலாளிகளும் தொழிலாளர்களும், நிலப்பிரபுக்களும் விவசாயிகளும் குலாக்குகளும் ஏழை விவசாயிகளும் இருப்பர். ஆனால் சோவியத் யூனியனில் அதுபோன்ற முதலாளிகள், நிலப்பிரபுக்கள், குலாக்குகள் ஆகியோர் இப்போது இல்லை. தொழிலாளர்கள் விவசாயிகள் என்ற இரண்டு வர்க்கங்கள் மட்டுமே இருக்கின்றன. அவர்களின் நலன்கள் பகைமைத் தன்மை இல்லாமல், மாறாக நட்புறவாக இருக்கின்றது. எனவே சோவியத் யூனியனில் பல கட்சிகள் இருப்பதற்கான இடமே இல்லை. ஆதலால், இந்த கட்சிகளுக்கான சுதந்திரத்திற்கும் இடமில்லை. சோவியத் யூனியனில் ஒரே கட்சிக்கான இடம் மட்டுமே உள்ளது. சோவியத் யூனியனில் ஒரேயொரு கட்சிதான் இருக்க முடியும். அது கம்யூனிஸ்ட் கட்சியாகத்தான் இருந்திட முடியும். அதுவே தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களை துணிச்சலுடன் இறுதிவரையில் பாதுகாத்திடும். இது இரண்டு வர்க்கங்களின் நலன்களையும் நன்கு பாதுகாத்திருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

நீங்கள் அறிந்ததுபோல், வரைவு அமைப்புச் சட்டத்தின் தேசந்தழுவிய விவாதமானது மிகப்பொரிய அளவிலான திருத்தங்களையும் சேர்க்கைகளையும் கொண்டுவந்துள்ளது. சோவியத் பத்திரிகையில் இவையெல்லாம் வெளியிடப்பட்டுள்ளது. திருத்தங்களின் மிகப்பெரிய வகையையும் அவையெல்லாம்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தேர்தலுக்கு அரசு நிதியும் ஒரே நேரத்தில் தேர்தலும்:

# முன்மொழியப்பட்டுள்ள தேர்தல் சீர்திருத்தங்கள் எவ்வளவு நேர்மையானவை, நடைமுறை சாத்தியமானவை

தேர்தல்களுக்கு அரசே நிதி வழங்குதல், அதாவது (தேர்வு செய்யப்பட்ட சில அரசியல் கட்சிகளின்) தேர்தல் செலவுகளுக்கு பொது நிதியிலிருந்து நிதி அளித்தல், பாராளுமன்றத்திற்கும் அனைத்து மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துதல் ஆகியவைதான் மத்திய அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்டுவரும் இரண்டு ஆலோசனைகளாகும். தேர்தல்களை சுமூகமாக நடத்துவதற்காக என்ற பெயரில் சமீபத்திய ஆண்டுகளில் மேற்சொன்ன இரண்டு பரிந்துரைகள் உள்ளிட்ட பல்வேறு முன்மொழிவுகளை மீண்டும் மீண்டும் பல வடிவங்களில் கூறிவருகின்றனர்.

தேர்தல் என்பது இன்று வக்கிரமான பணப் பிரயோகம், கேவலமான ஊழல், ஏமாற்று தந்திரங்கள், சாதிய–மதவாத அடிப்படையில் விஷமப் பிரச்சாரம், ஒருவரை ஒருவர் கடும்வார்த்தைகளால் சாடுதல், மற்றவர் மீது அவதூறு பரப்புதல் போன்ற இன்னபிற அம்சங்கள் நிறைந்த ஒன்றாக ஆகிவிட்டது. நிர்வாகம்–பிரதான ஊடகங்கள்–அரசாங்கம் மற்றும் அரசியல் கட்சிகள் எல்லாம் துணிச்சலாக மறுத்தாலும் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் தொடங்கி, வாக்குப்பதிவு இறுதியில் வாக்கு எண்ணிக்கை என அனைத்திலும் தாங்கள் ஏமாற்றப்படுவதாக நாடு முழுவதிலுமுள்ள மக்கள் எண்ணுவதோடு இத்தகைய அமைப்பின்மீது அதிருப்தியில் உள்ளனர். சுதந்திரமான நியாயமான தேர்தல் வேண்டும் என்று வலுவாகவோ அல்லது மௌனமான முறையிலோ அவர்கள் கோரிக்கையும் வைக்கின்றனர். இந்த செயல்முறைப்போக்கில் ஈடுபடும் பாராளுமன்றவாத கட்சிகளும் அவர்களது எஜமானர்களான ஆளும் முதலாளித்துவவாதிகள்–ஏகபோகவாதிகளும்கூட இது எப்போதுவேண்டுமானாலும் கோபாவேசமாக வெடித்தெழக்கூடும் என்பதை உணர்ந்துள்ளனர்.

எனவே மக்களை திசைதிருப்பவதற்காகவும் ஏமாற்றுவதற்காகவும் சில நடவடிக்கைகளை மாறி மாறி எடுக்கிறார்கள், அதை சீர்திருத்தங்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். இந்த சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படும் நடவடிக்கைகள் எல்லாம் வெற்று–ஏமாற்று நடவடிக்கைகள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நடவடிக்கைகள் எல்லாம், பூர்ஷ்வாக்கள் ஒருகாலத்தில் புனிதமானது என்று பிரகடனம் செய்த, தேர்தலில், புரட்சியாளர்களை விட்டுவிடுவோம், உண்மையான மக்கள் ஆதரவு (முதலாளித்துவ) சக்திகளுக்கும்கூட பங்கேற்பதை மென்மேலும் கடினமானதாக்குகிறது. சொல்லப்போனால், ஆளும் வர்க்கம் தனக்கு அடிவருடி சேவகம் செய்யும் கட்சிகளும் சக்திகளும் மட்டுமே ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும், தங்களது சுரண்டல் முதலாளித்துவ ஆட்சி தொடர்வதற்கு அவர்கள் உதவவேண்டும் என்பதை உத்திரவாதப் படுத்த முயற்சிக்கிறது. இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாகத்தான் அரசு நிதி மற்றும் ஒரேநேரத்தில் தேர்தல் என்ற தற்போதைய கூக்குரல் எழுப்பப்படுகிறது. தேர்தல் நடைமுறைகள் மீது சரியாக கோபமடைந்துள்ள மக்கள் முதலில் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### பாராளுமன்ற ஜனநாயகத்தை ஆரம்ப காலத்தில் முன்மொழிந்தவர்கள் சுதந்திரத்திற்கும் நியாயத்திற்கும் நின்றனர்

இந்த வரலாற்றுப்பூர்வமான பாராளுமன்ற ஜனநாயகம் அது உருவான சமயத்தில் தற்போதிருப்பதைப் போன்று இருக்கவில்லை என்ற உண்மையையும் மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். மக்களின் விருப்பம் மட்டுமே எந்த ஒரு அரசாங்கத்திற்கும் நியாயமான அடிப்படையாக இருக்கவேண்டும், அதாவது மக்கள் தீர்ப்பே இறுதித் தீர்ப்பு என்பதன் அடிப்படையில் அது நிறுவப்பட்டது. மன்னர்கள், அரசர்கள், உயர்குடியினரின் எதேச்சதிகாரம் படைத்த ஆட்சிக்கு எதிரான பூர்ஷ்வாக்களின் போராட்டத்தின் விளைவாகவே ஜனநாயகம் பிறந்தது. மக்கள் பிரதிநிதிகளை தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுத்து குடியரசு அரசாங்கம் உருவாக்கப்பட்டு தங்களைத் தாங்களே ஆளக்கூடிய இறையாண்மை அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என அந்த ஜனநாயகம் கோரியது.

சரியானதும் நியாயமானதுமான பெரும்பான்மையினரின் விருப்பம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று கருதப்பட்டது. ஆனாலும்கூட ஜனநாயகத்தின் ஒரு அத்தியாவசியமான அங்கமாக சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் தரப்பட்டது. அவர்களை பாதுகாப்பதற்கான சமமான சட்டங்களுடன் அவர்களது கருத்துக்களை வெளியிடவும் அவர்களின் சட்டரீதியான நியாயமான உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும் அவர்களுக்கு கட்டுப்பாடற்ற சமமான உரிமைகள் வழங்கப்பட்டன. அதே நேரத்தில் பெரும்பான்மையினரின் சர்வாதிகார வல்லாதிக்கத்தை தடுப்பதற்கான ஷரத்துகளும் பரிந்துரைக்கப்பட்டன. எனவே அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்குவதற்கும், இந்த சர்வாதிகார வல்லாதிக்கத்தை தடுப்பதற்கும் 'அரசியல் புத்திகூர்மையை' வளர்க்கவும், அதாவது மக்களின் விழிப்புணர்வை, அவர்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதற்கும் அழுத்தம் தரப்பட்டது. பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெற்ற வாதங்களும் விவாதங்களும் இந்த விழிப்புணர்வை உயர்த்துவதற்கும் உதவின.

ஜனநாயகத்தை ஆரம்ப காலத்தில் முன்மொழிந்தவர்கள் சகல அதிகாரமும் படைத்த மன்னர் ஆட்சியைமட்டும் எதிர்க்கவில்லை, ஊழலையும் அவர்கள் எதிர்த்தனர். சட்டமியற்றும் மன்றத்தில் இருக்கும் மக்களின் மற்றும் அவர்களது பிரதிநிதிகளிடம் இருக்க வேண்டியநற்பண்புகளையும் வலியுறுத்தினர். மக்களுக்கு சேவையாற்றுவதற்காக அவர்களின் நம்பிக்கையையும் மரியாதையையும் மக்களின் பிரதிநிதிகள் பெற்றிருக்க வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதென்பது ஆதாயம் பெறக்கூடிய தொழிலாகப் பார்க்கப்படவில்லை. மாறாக நேர்மையாகவும் உண்மையாகவும் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்யவேண்டும் என்ற உணர்வால் வழிநடத்தப்பட்டது. நாட்டின் நாட்டு மக்களின் நலன்களுக்காக உறுப்பினர்கள் விவாதங்களிலும் வாதங்களிலும் ஈடுபட்டனர். அதன் பின்னர் கௌரவத்தொகையாக ஒரு சிறு தொகையை வழங்கும் நடைமுறை வந்தது. அத்தகைய ஒழுக்க நெறி உயர்வுடைய, பொறுப்புணர்வு மிக்க, மக்கள்–ஆதரவு பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு மக்களுக்காக பணம் செலவழிக்க வேண்டியதை முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளிட்ட சட்டமியற்றும் இறையாண்மை அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும், சுமூகமான நிர்வாகத்தை நடத்துவதற்காக, அதிகாரத்தை சீர்தூக்கி சரிபார்க்கும் நடைமுறைகள் இருந்தன. சட்டமியற்றும் மன்றம், பாராளுமன்றம், பேச்சுரிமை, கருத்துரிமை, அரசாங்கத்தைத் தேர்வு செய்யும் உரிமை உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் உள்ளிட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை உத்திரவாதப்படுத்தும் சட்டங்களை உருவாக்கியது. இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணி நிர்வாகிகள் (Executives) மற்றும் அதிகார வர்க்கத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டது. மக்களுக்கு சுதந்திரத்தையும் நீதியையும் உத்திரவாதப்படுத்துவதற்கும், அரசாங்கம், பாராளுமன்றம் மற்றும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அதை நடைமுறைப்படுத்துவதில் அதீதமாகச் செல்வதிலிருந்து தடுப்பதற்கும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்காக நீதித்துறை இருந்தது. மக்கள்–ஆதரவு செயல்பாட்டு அரசு வேண்டும் என்பதற்காக ஊடகம் என்ற வலுவான நான்காவது தூண் (State) என்ற கோட்பாட்டை ஒருகாலத்தில் பூர்ஷ்வாக்கள் உருவாக்கினர். மக்களை விழிப்புணர்வடையச் செய்வதற்காக சமுதாயத்தின் எந்த ஒரு அவலத்தையும் ஆழமாக அலசுவதற்கும், சரியான ஆதாரங்களின் அடிப்படையில் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கும், அதனடிப்படையில் மக்கள் கருத்தை உருவாக்கி அழுத்தம் கொடுத்து அரசாங்கத்தை சரியான பாதையில் செலுத்துவதற்குமான துணிச்சலான பங்காற்றுவதற்கு ஊடகங்கள் அனுமதிக்கப்பட்டன.

சேர்த்து சுருக்கமாகக் கூறினால், உகந்த அரசியல் அமைப்பாக பாராளுமன்ற ஜனநாயகம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அது உருவான காலத்திலேயே சுரண்டல் முதலாளித்துவ ஒழுங்கை அது பெற்றிருந்தபோதும் கூட, அதன் முன்னோடிகள் தங்களது பூர்ஷ்வா அமைப்பிற்குள் எந்த அளவு நடைமுறைப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு தேர்தல் நடைமுறைகளை சுதந்திரமாகவும் நியாயமாகவும் வைத்திருப்பதற்காக நேர்மையான முயற்சிகளை மேற்கொண்டனர். இதுதான் ஆபிரகாம் லிங்கனின் அடிமுழக்கத்தில் வெளிப்பட்டது: 'மக்களால், மக்களின், மக்களுக்கான அரசாங்கம் என்பது புவியிலிருந்து அழியாது'.

### முதலாளித்துவம் சீரழியத் தொடங்கியதிலிருந்து பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகத்தின் தீமைகள் அம்பலமாகியுள்ளன

தொடக்க காலத்தின் முதலாளித்துவப் பொருளாதாரத்திலிருந்த சுதந்திரமான போட்டி ஏகபோகமாகி இறுதியில் ஏகாதிபத்தியத்திற்கு சென்றதும் முதலாளித்துவம் அதன் அழுகல் கட்டத்திற்குள் நுழைந்தது. பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரங்கள் வெகுசில ஏகபோகங்களின் கரங்களில் குவிந்தது. அனைத்து புனிதமான ஆசைகளும், அனைத்து உறுதிமொழிகளும் வெகு சீக்கிரமே காற்றில் காணாமல் போயின. விருப்புரிமை, பேச்சுரிமை, தேர்வுரிமை மற்றும் எதிர்ப்புரிமை போன்றவை படிப்படியாக எட்டாக்கனியாயின. இதன் விளைவாக, பாராளுமன்ற ஜனநாயகமும், தேர்தல்களும்கூட சீரழிந்து அழுகல் கட்டத்திற்கு சென்றுவிட்டன. பாராளுமன்ற ஜனநாயகத்தின் முகத்திரை கிழிந்துவிட்டாலும்கூட அவை திரையாக தொங்கவிடப்பட்டுள்ளன. இந்த முகமூடியின் பின்னணியில், ஒட்டுமொத்த தேர்தல் நடவடிக்கைகளும், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் தொடங்கி, வேட்பாளர்கள் தேர்வு, பிரச்சாரம், வாக்காளர்களை

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மார்ச் 23: தியாகி பகத்சிங் நினைவு தினம் அனுஷ்டிப்பு


சென்னையில் மார்ச் 23, 2017 அன்று நடந்தக் கூட்டத்தில் தோழர் மஹாலட்சுமி, ஏஐஎம்எஸ்எஸ் சார்பாக உரையாற்றுகிறார்


தேனியில் மார்ச் 23, 2017 அன்று நடந்தக் கூட்டத்தில் தோழர் குமாரவேல், ஏஐடிஒய்ஓ சார்பாக உரையாற்றுகிறார்


நெய்வேலியில் மார்ச் 23, 2017 அன்று நடந்தக் கூட்டத்தில் தோழர் பாபு, ஏஐடிஒய்ஓ சார்பாக உரையாற்றுகிறார்

## தேர்தலுக்கு அரசு நிதியும் ஒரே நேரத்தில் தேர்தலும்:

# முதலாளித்துவ சீரழிவினை சுட்டிக்காட்டுகிறது

3ம் பக்கத் தொடர்ச்சி

ஆசைகாட்டுதல், வாக்குப்பதிவு இறுதியில் வாக்கு எண்ணிக்கை வரை அனைத்துமே பணபலம், குண்டர் பலம், மற்றும் ஊடக பலம் அதோடு நிர்வாக அதிகாரத்தின் இறுகிய பிடிக்குள் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னாலிருந்து ஆளும் ஏகபோகங்களின் திட்டப்படி–மேற்பார்வைப்படி– தலையசைவுக்கு ஏற்றபடி தேர்தல்கள் நடைபெறுகின்றன. பிரச்சாரங்களுக்கு ஏராளமாக செலவு செய்யப்படுகின்றன; டெபாசிட் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது; வாக்காளர்களை இழுப்பதற்காக இலவசங்கள் தாராளமாக வழங்கப்படுகின்றன. கணக்குவழக்கில்லா இந்த கோடிக்கணக்கான பணமெல்லாம் எங்கிருந்து வருகின்றன என அனைவரும் வியப்படைகின்றனர். தேர்தல் முடிந்த பின்னர் ஏகபோகங்கள், தொழிலதிபர்கள், கார்ப்பொரேட்டுகள் தேர்தல் களத்தில் தாங்கள் செலவழித்த மிகப்பெரிய தொகையைத் திரும்ப எடுப்பதற்காக மக்களிடமிருந்தே ஆயிரத்தோரு வழிகளில் பணத்தை பறிக்கும்போது அதற்கான விடை கிடைக்கிறது. மற்றொருபுறம், பொது மக்களுக்கு இடையூறு என்ற பெயரில் குறைந்த செலவில் பரப்புரை செய்யப்பயன்படும் பழைய முறைகளான சுவரொட்டிகள் ஒட்டுதல், சுவர் விளம்பரங்கள் செய்தல், சிறிய சிறிய ஏராளமான கூட்டங்கள் நடத்துதல் போன்றவற்றிற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. உண்மையாகவே மதிக்கப்படும் நபர்களுக்குப்பதிலாக, தங்களது செயல்களாலும் முறைகேடுகளாலும் மதிப்பிழந்து நிற்பவர்கள் மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்கள்; இன்றெல்லாம் கிரிமினல்கள் என்று வெளிப்படையாக அறியப்பட்டவர்கள்கூட சட்டமியற்றும் மன்றங்களுக்குள் ஆர்ப்பாட்டமாக நுழைகின்றனர். ஏதாவது ஒரு வேட்பாளர் அல்லது கட்சி தொடர்பான சில தகவல்களை அதீதமாக வெளியிட்டு ஏகபோக குழுமங்களின் ஆதரவில் இயங்கும் பிரதான வலுவான ஊடகங்கள் மக்களை திசைதிருப்பி ஏமாற்றுகின்றன. மக்களை ஏமாற்றுவதற்காக கோயபல்சையும் விஞ்சும் அளவிற்கு பொய்யான செய்திகளை 'பணம் பெற்று அவற்றை உண்மையான செய்திகளாக' ஊடகங்கள் வெளியிடுகின்றன.

பெரும்பாலான மக்களின் அறியாமையை, விழிப்புணர்வின்மையை இந்த வலுவான தேர்தல் இயந்திரம் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. இதில் குழப்பப்படும் மக்கள் பாராளுமன்ற ஜனநாயகம் தங்களுக்கு நன்மை தரும் என்ற மாயையிலிருந்து விடுபட முடியாமல் போகின்றனர். நாட்கள் உருண்டோட, ஏதாவது ஒரு கட்சியை, ஏதோ சம்பளம் வாங்கிக்கொண்டு பணியாற்றும் வேலையாள் போல இந்த கட்சிகளின் பின்னால் இவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். வாக்காளர்கள், அதாவது பெரும்பாலான மக்கள், ஏதாவது ஒரு பிரச்சாரத்தின் பின்னால், வசியம் செய்யப்பட்டவர்கள் போல், விமர்சனமின்றி, எவ்வித கேள்வியும் கேட்காமல் ஏதுமறியாமலேயே செல்கின்றனர். ஏதாவது ஒரு வேட்பாளருக்கு சாதகமாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை மாற்ற முடியும், திட்ட நிரலுக்கு உட்பட்டு இயந்திரத்தில் மாற்றம் செய்து முறைகேடாக முடிவுகளை மாற்றமுடியும் என்பதைக் கூட அவர்கள் அறிந்துகொள்ளாமல் இருக்கின்றனர். இதற்குத்தேவை எஜமானர்களான ஆளும் ஏகபோகங்களின் ஆசிர்வாதமும் அதற்கு அடிபணிந்து ஒரு முழுமையான தேர்தல் முறைகேட்டினை மேற்பார்வையிடக்கூடிய ஒரு நிர்வாகமுமே. அது தேர்தல் எந்திரத்தை நவீன தொழில்நுட்ப உதவியுடன், அதாவது மின்னணு ஊடகங்கள் அல்லது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் உதவியுடன் முழுமையான தேர்தல் முறைகேட்டினை செய்திட முடியும்.

### சட்டமியற்றும் மன்றங்கள் இன்று கறை படிந்துவிட்டன : உண்மையான மக்கள் பிரதிநிதிகள் கவனமாக விலக்கப்படுகின்றனர்

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைமையில் தங்களது நோக்கத்திற்கு சேவகம் செய்வதற்கு கச்சிதமாக பொருந்தும் என்று ஆளும் வர்க்கம் நினைக்கும் கட்சிகளும் வேட்பாளர்களும் மட்டுமே வெற்றிபெற முடியும் என்ற அபாயகரமான கட்டத்திற்கு இன்றைய சூழ்நிலைமை சென்றுவிட்டது. சட்டமியற்றும் மன்றங்களில் தொழிலதிபர்களும் வியாபார சாம்ராட்டுகளுமே அடங்கியுள்ளனர். ஏன் மக்கள் பணத்தை சூறையாடியவர்கள், நன்கறியப்பட்ட கிரிமினல்கள், பெண்களை வெறுப்பவர்கள், ஏன் குறுகிய அடிப்படைவாத – இன வெறி கண்ணோட்டம் உடையவர்களும்கூட சட்டமியற்றும் மன்றங்களில் இருக்கின்றனர். புரட்சியாளர்களை விட்டுவிடுவோம், உண்மையான பொறுப்புணர்வு மிக்க மக்கள்– ஆதரவு பிரதிநிதிகள் என்பவர்கள் சட்டமியற்றும் மன்றங்களில் நுழைவது இருக்கட்டும் அவர்களால் இந்த நடைமுறைப்போக்கில் பங்கேற்கக் கூட முடியவில்லை.

இன்றைய தேர்தல் பிரச்சார காட்சியை புரிந்து கொள்ள வேண்டுமென்றால் இன்று யுஎஸ்ஏவிலும் இந்தியாவிலும் நிலவும் பாராளுமன்ற ஜனநாயக வடிவத்தை, அதிலும் குறிப்பாக சமீபத்தில் நடைபெற்ற யுஎஸ்ஏ அதிபர் தேர்தலையோ அல்லது இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலையோ மீண்டும் நினைவுபடுத்திப்பார்க்க வேண்டும்.

மற்ற முதலாளித்துவ நாடுகளைப்போலவே, இந்தியாவிலும் யுஎஸ்ஏவிலும் இத்தகைய தேர்தல்கள் மூலமாக உருவாக்கப்படும் பாராளுமன்ற அவைகள் என்பவை எப்படியாகிலும் நியாயமாகவோ அல்லது குறுக்கு வழியிலோ பணம் சம்பாதிக்கும் மையங்களாக மாறிவிட்டன. அவை இழிவான அவமானகரமான முறைகளில் பணம் கைமாறும் பங்குச் சந்தை பரிமாற்றங்கள் போல செயல்படுகின்றன. இந்தியா போன்ற நாட்டில், மத்திய அல்லது மாநில அளவிலுள்ள, சட்டமியற்றும் மன்றங்களின் உறுப்பினர்கள், ஒவ்வொரு கூட்டத்தொடரில் இல்லாவிட்டாலும், அவ்வப்போது தங்களது சம்பளங்களையும் சலுகைகளையும் உயர்த்த வேண்டும் என்று கூக்குரலெழுப்புகின்றனர். ஏற்கனவே மக்கள் பணத்தில் பெருவாரியாக ஊதியம் பெறும் அவர்கள், பொதுமக்கள் நலத்திட்டங்களின் அத்தியாவசிய சேவைகளான கல்வி, சுகாதாரம், வீடு, குடிநீர், போக்குவரத்து போன்ற இன்னபிறவற்றிற்கான மானியங்களை குறைக்கும் அல்லது ரத்து செய்வதற்கான சட்டங்களை இயற்றுவதில் உறுதியாக இருந்துகொண்டு தங்களுக்கு மேலும் அதிகமான ஊதியம் அல்லது சலுகை வேண்டும் என்று கோருவதற்கு சற்றும் கூச்சப்படவில்லை. அதுவும் உலக நாடுகளில் அதிகம் ஏழைகளை, ஊட்டச்சத்து குறைபாடு உடைய குழந்தைகளை வளர்ச்சியற்ற அதனால் சிறுவயதிலேயே மரணமடையும் குழந்தைகளைக் கொண்ட இந்நாட்டில் இதை செய்கிறார்கள்.

யுஎஸ்ஏவில் பெருங்கோடீஸ்வர முதலைகள் சமீபத்திய அதிபர் தேர்தலில் குழுமியிருந்தனர். இந்த தேர்தல் பிரச்சாரத்தில் எதைத்தான் காண முடியவில்லை! மேலே சொன்ன அனைத்து அவலங்களும் பிரச்சாரம் முழுவதும் தென்பட்டன. ஒட்டுமொத்த உலகமும் இதை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படையாகப் பார்த்தது. இவையனைத்தும் தாராளமாக பணம் இறைக்கப்படும் போதுதான் நிகழும். தேர்தலும் பண வெள்ளமும் ஒன்றாகிவிட்டன. இறுதியில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் டிரம்ப் பதவி ஏற்ற அன்றே பண முதலைகளை, போர் வெறியர்களை நிர்வாகத்திற்குள்ளும் அதேபோல அவரது உறவினர்களையும், குடும்ப உறுப்பினர்களையும் மிக முக்கியமான பொறுப்புகளிலும் அதிகாரமிக்க பதவிகளிலும் அமர வைத்தார்.

அதோடு, இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட உலகின் எந்தவொரு முதலாளித்துவ நாட்டிலும் இன்று மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் பேசப்படுவது அரிதாக உள்ளது, தேர்தல்களங்களிலும் சரி அல்லது அவைகளுக்குள்ளும் சரி அதுபற்றி விவாதங்கள் நடைபெறுவதே இல்லை. அதற்குப் பதிலாக அங்கே வெறும் ஏமாற்று வார்த்தை ஜாலங்களும், வெட்கக்கேடான பொய் வாக்குறுதிகளும் இலவச அறிவிப்புகளும், விஷம் தோய்ந்த இனவெறி–அடிப்படைவாத பிற்போக்குவாத பிரச்சாரமும், தேசியவெறி கோஷங்களும், தனிநபர் தாக்குதல்களும் இன்னும் இதுபோன்றவைகளே நடைபெறுகின்றன. இந்தியாவில், சமீபத்தில், பாராளுமன்றமானது மக்கள் பிரச்சினைகளைப் பற்றி சரியான விவாதம் நடத்தாமல் ஒருவர் மீது ஒருவர் களங்கம் சுமத்துவதற்கும் அவதூறு பேசுவதற்குமான இடமாகவும் அவ்வப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டு அதனால் காலவரையற்ற ஒத்திவைப்பு செய்யும் இடமாகவும் மாறிவிட்டது. ஆனாலும் கூட, அவர்களது சலுகைகளை ஊதியங்களை அதிகரிப்பதிலும் அதேபோல மக்களின் கோபத்தையும் எதிர்ப்புக் குரலையும் முறியடிப்பதற்கான வழிகளையும் முறைகளையும் கொண்டுவருவதில் அனைவரும் ஒரே சுருதியில் பாடுகின்றனர்.

### சீர்திருத்தங்களின் உள்நோக்கம்

பாராளுமன்ற ஜனநாயகத்தின் இந்த உண்மையான வடிவம் மக்களிடம் அம்பலப்படுத்தப்படாமலிருக்க ஆளும் ஏகபோகங்கள், இந்த அழுகிப்போன இன்றைய பாராளுமன்ற ஜனநாயகத்தை வெளிப் போர்வையாக, அது என்னதான் காய்ந்த சருகாக சுருங்கிப் போனாலும், அதை தக்கவைத்துக் கொள்ள மும்முரமாக உள்ளனர். ஏமாற்றும், துரோகமிழைக்கும் இந்த முழுமையான திட்டம் சிந்திக்கும் மக்களின் கவனத்திற்கு வராமலிருப்பதற்காக, ஆளும் வர்க்கமும் அதன் அடிவருடி அரசியல் மேலாளர்களுமான பூர்ஷ்வா பாராளுமன்ற கட்சிகளும் குழப்பத்தை உருவாக்கிட பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றனர். இத்தகைய மிகவும் ஊழல் மலிந்த தேர்தல் நடைமுறைகளுக்கும் அதனால் உருவாகும் சட்டமியற்றும் மன்றங்களுக்கும் எதிரான மக்களின் எதிர்ப்பையும் கோபத்தையும் மழுங்கடிப்பதற்காக மிகவும் பொய்யான துரோக நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிய வேண்டும். அதோடு கூடவே, தேர்தல் நடைமுறைகளில் உள்ள தவறுகளை சரி செய்து அதை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு எந்த அளவிற்கு நேர்மையாகவும் சிரத்தையாகவும் முயற்சிக்கிறோம் என்ற தோற்றத்தை உருவாக்கவும் அவர்கள் முயற்சித்து வருகின்றனர். அவர்களது நடவடிக்கைகள் மக்களிடம் அம்பலப்படுத்தப்படும் போது அதை சரிசெய்யும் நடவடிக்கையாக மற்றொரு தந்திரத்தை அவர்கள் பின்பற்றுகின்றனர். அவர்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகள் அல்லது சக்திகளின் கைகளிலிருந்து அதிகாரம் கைநழுவி விடக்கூடாது என்பதும் எந்த ஒரு புரட்சிகர சக்தியின் தலைமையின் கீழும் மக்கள் ஒன்றுதிரண்டுவிடக் கூடாது என்பதுமே அவர்களது லட்சியமாக இருக்கிறது.

முதலாளித்துவம் தனது ஆட்சியைத் தொடரும் வரையில் இந்த நிலையிலிருந்து எந்த விடுதலையும் இல்லை. ஆனாலும்கூட மக்கள் முன்பு ஒரே வழிதான் உள்ளது. எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கும் நிவாரணம் பெறும்படியான வலுவான ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுத்து, முதலாளித்துவ–எதிர்ப்புப் புரட்சியை நோக்கிய ஒன்றாக அந்த இயக்கங்களைக் கொண்டு செல்வது ஒன்றே அந்த வழியாகும்.

தேர்தல் செலவுகளுக்கு அரசே நிதிஉதவி வழங்குவது, ஒரே நேரத்தில் பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் தேர்தலை நடத்துவது ஆகிய இரண்டும்தான் தற்போது ஆட்சியில் இருக்கும் பாஜகவும் மற்ற அனைத்து கட்சிகளும் பேசும் இரண்டு திசைதிருப்பும் நடவடிக்கைகளாகும். இந்த இரண்டையும் நாம் மேலே சுட்டிக்காட்டிய திட்டத்தின் அடிப்படையில் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். சீர்திருத்தங்கள் என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவதற்கான திட்டங்களே இவை.

### தேர்தல் செலவுகளுக்கு அரசு நிதி : ஏமாற்று மோசடி

நீண்ட காலத்திற்கு முன்பே, முதலாளித்துவ அமைப்பின் குணாம்சங்களை விளக்கிய, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் காரல் மார்க்ஸ் அவர்கள் முதலாளித்துவத்தில் பணம்தான் உச்ச அதிகாரம் படைத்தது என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டினார். ஒழுக்கநெறி, விழுமியங்கள் மற்றும் அறநெறி போன்ற அனைத்தையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு அனைத்தையும், அனைத்து செயல்களையும், ஏன் மனித உறவுகளையும்கூட பணமே தீர்மானிக்கிறது. நாம் மேலே எடுத்துக் காட்டியபடி, தற்போது உலக முதலாளித்துவ அமைப்பு அழுகிய நிலைக்கு சென்றுவிட்ட நிலையில் முதலாளித்துவ நாடுகளில் வாழும் மக்கள் இந்த உண்மையை சாதாரணமாகப்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தேர்தலுக்கு அரசு நிதியும் ஓரே நேரத்தில் தேர்தலும்:

# மக்களின் உண்மையான பிரதிநிதிகளை தேர்தலிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான சதிதிட்டம்

4ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்தே, அதாவது தேர்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, மக்கள் பிரதிநிதிகள் என்று அழைக்கப்படுவோர் பணபலம் போன்ற பல்வேறு பலத்தை பயன்படுத்தி எப்படி சட்டமியற்றும் மன்றங்களுக்குள் செல்கின்றனர் என்பதையெல்லாம் வெளிப்படையாகப் பார்த்து இந்த உண்மையை சந்தேகத்திற்கிடமின்றி புரிந்துகொள்கின்றனர்.

கிழடுதட்டி காலாவதியாகிப்போன முதலாளித்துவத்தில், ஆறு கண்டங்களிலுமுள்ள அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளும், பலம் வாய்ந்த யுஎஸ்ஏவில் தொடங்கி இதர நாடுகள் வரை, பணபலமில்லாமல் நடைபெறும் எந்தத் தேர்தலையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. பணம் மட்டுமே பிரதான காரணியாகிவிட்டது மட்டுமல்ல. மற்றவரைக் காட்டிலும் எவ்வளவு பணத்தை தன்னால் செலவழிக்க முடியும் என்பதையும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களை விலைக்கு வாங்க குதிரை பேரம் நடத்த எவ்வளவு பணம் செலவழிப்பது போன்றவையும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சங்கிலியால் கட்டப்பட்டுள்ள நிலையில் தேர்தல் என்பது ஒருபோதும் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருக்காது. பணம் பல்வேறு தந்திரங்களுடன் அச்சுறுத்தல்களுடன் தாராளமாக பாதாளம் வரை பாய்கிறது. இவையெல்லாம் மறைமுகமாகவே எப்போதும் நடைபெறுவதில்லை. கூடவே சிந்திக்கும் மக்களை ஏமாற்றுவதற்காக, அனைத்து பூர்ஷ்வா அமைப்புகளும், அதோடு ஏகபோகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பெருவாரியான ஊடகங்களும் பணம் ஊடுருவுவதை நிறுத்துவதற்கும் பண ஆதிக்கத்தைத் தடுப்பதற்கும் எந்த அளவிற்கு இடைவிடாது முயற்சித்து எடுக்கப்பட்டு வருகிறது என்று மக்களை நம்பவைப்பதற்காக 24 மணி நேரமும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, தேர்தல் செலவுக்கு ஒரு உச்சவரம்பை நிர்ணயித்துள்ளது, இதை மீறுபவர்கள் இந்த உச்சவரம்பை பொருட்படுத்தமாட்டார்கள் என்பதை நன்கு தெரிந்தும் உச்சவரம்பு தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் விவாதித்தபடி ஏராளமான தேர்தல் நிதியை தங்களது முதலாளிகளிடம்–ஏகபோக எஜமானர்களிடம், உதவி செய்பவர்களிடம், நலம் விரும்பிகளிடமிருந்து திரட்டவல்ல கட்சிகள் அல்லது சக்திகள்தான் தேர்தல் களத்தில் சுதந்திரமாக செயல்படமுடியும். பெருவாரியான ஏழை, எளிய சாமானிய மக்களின் நலனுக்காக விடாப்பிடியாகப் போராடிவரும் கட்சி அல்லது சக்தி பணம் இல்லாத காரணத்தால் வெற்றி பெறுவதை விட்டுவிடுவோம் தேர்தல் களத்திலேயே நுழைய முடியாதபடி மென்மேலும் ஓரங்கட்டப்பட்டும் தடுக்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றனர். பணம் படைத்தவர்கள், ஏகபோகங்கள், தொழிற்குழுமங்கள், கார்ப்பொரேட்டுகள் தாங்கள் விரும்பும் கட்சிக்கு தாராளமாக கோடிக்கணக்கான நிதியை வாரி வழங்குகின்றனர். அந்த கட்சி ஆட்சியைப் பிடித்துவிட்டால் தாங்கள் செய்த முதலீட்டிற்கு பிரதிபலனாக கோடிகோடியாய் பணத்தை திரும்பப்பெற்றுக்கொள்கின்றனர். இதில் பலியாவது மக்கள்தான், மறைமுக வரி உயர்த்தப்பட்டு இதனால் இறுதியில் பொருட்களின் விலைவாசி உயர்ந்து மக்களின் சுமைதான் அதிகரிக்கிறது.

ஒட்டுமொத்த தேர்தல் இயந்திரமும் பணத்தால் நடத்தப்படுகிறது, அது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதில் பெரும்பான்மையான பணம் கறுப்புப் பணமே, இதை வைத்திருப்பவர்கள் தங்களுக்கு வேண்டப்பட்ட அரசியல் கட்சிகள் மூலம் அதை வெளிக் கொண்டுவருகின்றனர். கறுப்புப்பணத்தை ஒழிக்கிறோம் என்று எவ்வளவு தான் பேசினாலும் அது தொடர்ந்து இருப்பதோடு மேலும் முழுவீச்சில் பல்கிப் பெருகியே வருகிறது. அரசியல் கட்சிகளுக்கு தனிநபர்கள் நன்கொடை வழங்குவதை கட்டுப்படுத்துவதற்காக 2000 ரூபாய் உச்சவரம்பை புத்திசாலித்தனமான முடிவாக கொண்டுவந்துள்ளதாக அரசாங்கம் காட்டிக் கொள்கின்றது. ஆனால் தவறிழைக்கும் அரசியல் கட்சிகள் ஆயிரமாயிரம் வழிகளைக் கண்டுபிடித்து தங்களது பதிவேடுகளில் அத்தகைய வரம்பிற்குள் நன்கொடை வழங்கிடும் உண்மையான அல்லது பொய்யான நன்கொடையாளர்களை கொண்டு வருவர் என்பது அனைவரும் அறிந்ததே. இப்படி இருக்கையில் இந்த நடவடிக்கை புத்திசாலித்தனமானது என்று கூறுவது நகைப்புக்குரியதன்றோ! எனவே தேர்தல்களில் எல்லா மட்டங்களிலும் தொடர்ந்து பணம் பாயப்போவது நிச்சயம் உறுதி, தங்கள் எந்திரத்தை இயக்குவதற்காக ஏகபோகங்கள் பணம் வழங்குவர். ஏகபோகங்களின் சார்பாக அரசாங்கம் ஏதாவது ஒரு விதியை வகுத்துக் கொண்டே இருக்கும். ஆனால் இந்த நிகழ்வுகள் தாராளமாக தங்குதடையின்றி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். இந்தப் பின்னணியில், மக்களைப் பாதுகாக்கவேண்டிய அரசாங்கம் வேட்பாளர்களின் தேர்தல் செலவுக்கு அரசு நிதி உதவி செய்வதன் மூலம் அது மக்களையே தின்பதோடு தேர்தலுக்கு நிதியளிக்கும் இந்த தீய நடைமுறைக்கு எரிகின்ற தீயில் மேலும் எண்ணெயை ஊற்றுவது போல் ஆகின்றது.

சரி, தேர்தலுக்கு நிதி வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு பணம் எங்கிருந்து வரும்? இது பொது மக்களின் நிதி அதாவது பொதுநிதியிலிருந்தே வழங்கப்படும். அந்தப் பணம் எப்படி திரும்ப பெறப்படும். இயல்பாகவே மக்களிடமிருந்துதான் பெறப்படும். நேரடி மற்றும் மறைமுக வரிகள் உயர்த்தப்படும். இதனால் விலைவாசி உயரும். மக்களின் சுமை மேலும் அதிகரிக்கும். மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம் குடிநீர் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை அரசாங்கம், நிதிச் சுமையைக் குறைக்கிறோம் என்ற பெயரில், தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருகிறது. விவசாயத்திற்கான மானியம் குறைக்கப்படுகிறது. பொதுவிநியோகத்திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்படுகின்றன. பெட்ரோல் டீசலுக்கான மானியம் ரத்து செய்யப்பட்டு அவற்றின் மீதான வரி உயர்த்தப்படுகிறது. கோடிக்கணக்கான மக்களின் நலன்களுக்கான திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய நிதி இல்லையாம். ஆனால் மக்களுக்கு விரோதமாக, நேர்மையில்லாமல், ஒழுக்கநெறி, அறநெறி பிறழ்ந்து, இரட்டைநாக்கோடு பேசி, மக்களைப் பிளவுபடுத்தி, அவர்களின் அடிவயிற்றில் அடிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்படும் கட்சிகளுக்கும் தேர்தல் செலவுக்கு வழங்குவதற்கு மட்டும் பணம் இருக்கிறதாம்? இது ஒரு மோசடி நடவடிக்கை. ஒருவேளை அரசே தேர்தல் நிதி வழங்கினாலும் கூட சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் இந்த கட்சிகள் எப்படியெல்லாம் வளைப்பார்கள் மீறுவார்கள் என்பதை கவனிக்கத் தவறக்கூடாது.

தற்போது அனைத்து அரசியல் கட்சிகளும் அரசு நிதி உதவி வழங்கும் முன்மொழிவை ஆதரிக்கின்றன. இந்த ஒற்றை நடவடிக்கையை ஓரணியில் ஆதரிக்கின்றனர்; அவர்களால் வேறு என்ன செய்யமுடியும்? இந்த நடவடிக்கையின் மூலம் இவர்கள் அனைவருமே பலன் பெறுவதால் யாருமே எதிர்க்கமாட்டார்கள். இது அவர்களின் எஜமானர்களது திட்டம் என்பதையும் அறிவார்கள்.

சரி, ஒருவேளை அரசே தேர்தல் செலவுகளுக்கு நிதி வழங்குவது என்று வைத்துக்கொள்வோம், எந்தெந்த கட்சிகளுக்கு எவ்வளவு பணம் வழங்குவார்கள்? வேட்பாளர்களுக்கு வழங்குவார்களா அல்லது கட்சிகளுக்கா? எந்த அடிப்படையில் வழங்குவார்கள்? அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கும் சுயேச்சைகளுக்கும் எப்படி ஒதுக்குவார்கள்? தேசிய கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் எப்படி நிதி ஒதுக்குவார்கள்? ஒரே மாதிரியா நிதி ஒதுக்குவார்கள்? நிச்சயமாக இல்லை? இங்கே பாரபட்சம் இருக்கும்? குறிப்பிட்ட சதவீத வாக்கு பெறவேண்டும் என்ற விதியை நிர்ணயிப்பார்கள்? அதனடிப்படையில் ஆளும் வர்க்கத்திற்கு அடிவருடி சேவகம் செய்யும் கட்சிகளுக்கு மட்டுமே நிதி அளிப்பார்கள்? புரட்சிகரக் கட்சிகளுக்கு கேட்கவே வேண்டாம். ஒரு தொகுதியில் செல்வாக்குள்ள ஒரு சுயேச்சை போட்டியிட்டால் அவருக்கு நிதி வழங்குவார்களா? இதன்மூலம் படிப்படியாக இரு கட்சிகள் மட்டுமே தேர்தலில் பங்கேற்கும் சூழலுக்கு வடிவம் கொடுக்க முயற்சிக்கிறார்கள்.

அதோடு, ஆட்சியில் இருந்தாலோ அல்லது எதிர்க்கட்சியாக இருந்தாலோ அவர்கள் இழப்பதற்கு ஏதுமில்லை. எப்படியிருந்தாலும் நேரடியாக அரசு நிதியையும் மறைமுகமாக வழக்கம்போல் கறுப்புப் பணத்தையும் அவர்கள் அனுபவிப்பார்கள். எனவே இந்த நடவடிக்கை நேர்மையற்றது மட்டுமல்ல, இது முழுக்க முழுக்க ஏமாற்று வேலையுமாகும். இது தேர்தல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தமல்ல, ஆனால் தேர்தலை வழக்கம் போலவே நடத்த உதவுவதற்காகவே, பணபலம் அதீதமாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிரான மக்களின் கோபத்தை திசைதிருப்பி குழப்புவதற்காகவும் மேலும் அந்த கோபம் அதிகரித்துவிடாமல் இருப்பதற்காகவுமே ஆகும். ஆளும் வர்க்கத்திற்கு அடிவருடி சேவகம் செய்யும் கட்சிகள் இந்த நடவடிக்கையின் மூலம் ஆதாயம் பெறுவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

### நடைமுறை சாத்தியமில்லா ஓரே நேரத்திலான தேர்தல் – நோக்கம் மறைக்கப்படுகிறது

பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தவேண்டும் என்ற

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மூடிய மதுபானக் கடைகளை வேறிடத்தில் திறக்காதே






நெடுஞ்சாலையில் மூடிய மதுபானக் கடையை கிராமங்களில் திறக்கக்கூடாது என்று வலியுறுத்தி ஏப்ரல் 07, 2017 அன்று காமக்காபட்டி, அம்சாபுர கிராம மக்கள் பேரணியாக சென்று தேனி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கும் காட்சி

## தேர்தலுக்கு அரசு நிதியும் ஒரே நேரத்தில் தேர்தலும்:

# சக்திவாய்ந்த மக்கள் இயக்கங்கள் மட்டுமே பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான தாக்குதலுக்கு ஓரளவேனும் தடையேற்படுத்த முடியும்

5ம் பக்கத் தொடர்ச்சி

மற்றொரு முன்மொழிவு மீண்டும் பேசப்படுகிறது. தேர்தல் செலவைக் குறைப்பதற்காகவும் நிர்வாக நடவடிக்கைகளை சுமூகமாக எடுப்பதற்கும் இது உதவும் என்ற காரணம் கூறப்படுகிறது. நிதிப் பற்றாக்குறை குறித்து அரசாங்கம் அவ்வப்போது பேசிவரும் நிலையில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு ரூ9000 கோடிக்கும் மேல் செலவாகும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் எச்சரிக்கையை சரியான நேரத்தில் தெரிவித்துள்ளார்.

தொடக்கத்தில் சுதந்திர இந்தியாவில் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றது. ஆனால், பல்வேறு காரணங்களால் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலைமைகள் உருவாயின. இந்தியா போன்ற பரந்துபட்ட நாட்டில் இது இயல்பானதே. இங்கே வெவ்வேறு மாநிலங்களில், இயற்கையாகவோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டோ பல்வேறு காரணிகளால், வெவ்வேறு சூழ்நிலைமைகள் உள்ளன; ஒரு பிராந்தியத்தில் அதற்கென தனிப் பட்ட பிரச்சினைகள், திருவிழாக்கள், கலாச்சார சம்பிரதாயங்கள் செயல்பாடுகள் என வெவ்வேறு சூழல்கள் நிலவுகின்றன. திடீரென சில இடையூறுகள் ஏற்படுகின்றன. வேறு சில காரணிகளும் உள்ளன.

தங்களுக்கு அடிவருடி சேவகம் செய்யும் கட்சிகள் எவ்விதத் தயக்கமுமின்றி தொடர்ந்து தங்களுக்கு சேவகம் செய்யவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அதிகாரத்தையும் பதவிகளையும் கொடுத்து திருப்திபடுத்த வேண்டும் என்று ஆளும் முதலாளித்துவ வர்க்கம் எப்போதும் முயற்சிக்கிறது. கட்சிகளும் தங்கள் பங்கிற்கு மற்றவர்களைக் காட்டிலும் ஆதாயம் பெற முயற்சிக்கின்றனர். ஆட்சியில் உள்ளவர்கள் தங்களது பெரும்பான்மையை உத்திரவாதப்படுத்திக் கொள்வதற்காக எதிர்க்கட்சிகளிடம் பிளவை ஏற்படுத்துகின்றனர்; ஆளும் கட்சியை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. மத்தியில் ஆட்சியில் இருக்கக் கூடிய கட்சியோ வேறுகட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களை பிளவுபடுத்தி கவிழ்ப்பதற்கு தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இவை அனைத்திலும் ஆளும் ஏகபோகங்களின் பணம்தான் பயன்படுத்தப்படுகிறது. இந்த போட்டி அரசியலால் கட்சித்தாவல் தடைசட்டங்களை அரசாங்கங்கள் கொண்டுவருகின்றன. ஆனால் அதில் பிரயோஜனமில்லை. கட்சித்தாவல்கள் ஏற்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் கவிழ்கின்றன. இதனால் ஜனாதிபதி ஆட்சியை கொண்டுவரும் நிலைமை ஏற்படுகிறது. நாசகார முதலாளித்துவ சுரண்டலானது மக்களிடையே கடுமையான கோபத்தை உருவாக்கிவருகிறது, அது எந்தநேரமும் வெடிக்கும் நிலையில் உள்ளது. இதுவும்கூட அரசியல் நிலையற்ற தன்மையையும் பெரும்பான்மை பலம் பெற்ற அரசாங்கங்களில் கூட பிளவையும் உருவாக்குகிறது. அத்தகைய சூழ்நிலைமைகளிலும் கூட சட்டமன்றங்கள் கலைக்கப்படுகின்றன, இதனால் கூட இடைத் தேர்தல்கள் வரும் அவசியம் ஏற்படுகிறது. சில நேரங்களில் ஆட்சியில் உள்ள அரசாங்கமே தங்கள் கட்சியில் பிளவு ஏற்படலாம், ஆட்சி கவிழக்கூடும் அல்லது தற்போது நல்ல பெயர் இருப்பதால் உடனடியாகத் தேர்தலைச் சந்தித்தால் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் கூட ஆட்சிக்காலம் முடியும் முன்பே தேர்தலை சந்திக்கின்றனர்.

ஆக ஆறு மாதத்திற்கு மேல் ஒரு தொகுதியை காலியாக வைத்திருக்கக் கூடாது என்பதால் அங்கே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. எனவே ஒரே நேரத்தில் தேர்தல் என்பது சாத்தியமில்லாததாகிறது. ஆனால் ஒரே நேரத்தில்தான் தேர்தல் என்றால், இதுபோன்ற தருணங்களில் உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு மாறாக அங்கே தேர்தல்கள் சில காலம், சில ஆண்டுகள்கூட நடத்தப்படமாட்டாது. அரசாங்கத்தை நிர்வகிக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு மாநிலத்திலோ அல்லது பிராந்தியத்திலோ தேர்ந்தெடுக்கப்படாத ஆட்சி நடக்கும், அதாவது அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சியே நடக்கும். அதாவது அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்காது, அதிகார வர்க்கத்தின் ஆட்சியே நடக்கும். அவர்கள் தேர்தலைச் சந்திக்க வேண்டியது இல்லை என்பதால், மக்களுக்கு கடமைப்பட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை, மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகிறதா அல்லது மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுகிறதா என்பது குறித்தெல்லாம் கவலைப்படமாட்டார்கள். இந்த காலங்களில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டால், ஆளும் வர்க்கம், ஏகபோகங்கள் அதைத் தீர்ப்பதற்கு மாறாக, தங்களுடைய திட்டங்களைத் தங்குதடையின்றி அமல்படுத்துவதற்கு அதிகார வர்க்கத்தின் ஆட்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்வர். அழுகிப்போன முதலாளித்துவ அமைப்பில் மேலே கூறிய அரசியல் சர்ச்சைகளிலிருந்தும் இடையூறுகளிலிருந்தும் தப்பிக்க வழியே இல்லை. ஏதாவது ஒரு வழியில் நிலையான ஆட்சி என்று பேசுவதெல்லாம் வெற்று ஜம்பங்களே ஆகும்.

ஒரு மாநிலத்தில் தேர்தல் நடத்தும்போது கூட ஒரே கட்டத்தில் நடத்தும் அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் இல்லை. கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலுமே பல கட்டங்களாகத்தான் தேர்தல் நடைபெறுகிறது. ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே தேர்தல் நடத்தும்போதே இந்த நிலை என்றால் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு உரிய கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா? ஏற்கனவே மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே நிதி ஒதுக்க மறுக்கும் அரசாங்கம் எதற்காக மக்கள் வரிப்பணத்தின் மிகப்பெரிய தொகையை உற்பத்திசாரா விஷயத்திற்காக விரயமாக்க வேண்டும்?

### மக்கள் என்ன செய்வதென்று முடிவெடுக்க உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும்

தொடக்கத்திலேயே நாம் கூறியபடி இன்றைய தேர்தல்களில் நடைபெறும் முறைகேடுகள் நல்லெண்ணம் கொண்ட, பூர்ஷ்வா பாராளுமன்ற நடவடிக்கைகளில் நம்பிக்கை உடையவர்களைக் கூட வெறுப்படையச் செய்து விட்டன. ஏற்கனவே சுவரொட்டிகள் ஒட்டத் தடை, மக்களிடம் நேரடியாகப் பிரச்சாரம் செய்வதில் கெடுபிடி, கூட்டங்கள் நடத்துவதற்கு அநேக கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன. ஆனால் பணபலம் படைத்த கட்சிகள் அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் மூலமாக ஏராளமான தொகைகளை செலவழித்து விளம்பரங்கள் செய்திகள் மூலமாகப் பிரச்சாரம் செய்வதற்கு எந்த தடங்களும் இல்லை. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகளில் சந்தேகங்கள் வலுத்து வருகின்றன. அதற்கான எதிர்ப்பும் அதிகரித்து வருகிறது. தேர்தலை நியாயமாகத்தான் நடத்துகிறோம் என்று காட்டவேண்டிய நிர்ப்பந்தத்தில் தேர்தல் ஆணையம் உள்ளது. எனவேதான் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் ஏதாவது ஒரு முறையை விதிகளை கொண்டு வருகின்றனர். ஆனால் அவை எல்லாமே ஏற்கனவே நடைபெறும் முறைகேடுகளை தடுப்பதற்கு மாறாக அதிகரிக்கவே செய்கின்றன. பணம் படைத்தவர்கள் மட்டுமே தேர்தலை சந்திக்கும் வாய்ப்பை வழங்கும் அதே நேரத்தில் சாமானிய மக்களுக்கான கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை மென்மேலும் சுருக்கிவருகின்றன என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும்.

மக்கள் இந்த உண்மைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும், அதனடிப்படையில் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் முடிவெடுக்க வேண்டும். பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகம் அழுகி மரித்துவருவதை வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்க வேண்டுமா? அல்லது ஒருகாலத்தில் ஒளிமயமானதாக இருந்து தற்போது பிணச் சுமையாக பயனற்று இருக்கும் இந்த சமுதாய அமைப்பைத் தூக்கியெறிவது குறித்து யோசிக்க வேண்டுமா? மக்களைப் பலியாக்கும் ஏகபோகங்கள் மற்றும் அவர்களது அடிவருடி சேவக சக்திகளின் மோசமான துரோகத்தை அப்படியே அனுமதிப்பதா?

முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் மேற்கட்டுமானமாக பாராளுமன்ற ஜனநாயகம் உள்ளது என்பது உண்மைதான். தற்போதைய காலாவதியாகிப்போன முதலாளித்துவ அமைப்பு தங்கள் பொருளாதார, அரசியல் மற்றும் ராணுவ அதிகாரங்களை தங்களிடையே குவித்துக்கொள்வதில் தீவிரமாக உள்ளனர். இத்தகைய அதிகாரக் குவிப்புதான் பாசிசத்தின் அடிக்கல் ஆகும், இதுதான் இன்று அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் வெளிப்பட்டு வருகிறது. ஆனால் பாசிசத்திற்கு மக்களின் ஆதரவும் தேவை. எனவே தங்கள் அமைப்பிற்கு ஆதரவாக மக்களை ஏமாற்றுவதற்காக சுரண்டல் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மறைப்பதற்காக பாராளுமன்ற ஜனநாயக அமைப்பை முகமூடியாக ஆளுபவர்கள், ஏகபோகங்கள் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்கின்றனர். முதலாளித்துவ ஒழுங்கு இருக்கும் வரையில், அடிப்படையில் இந்த சூழ்நிலைமை மாறப்போவதில்லை. இந்த கட்டமைப்பிற்குள் இதுபோன்ற தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தால் அது தேர்தல் செயல்முறைகளைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தை மென்மேலும் ஏகபோகங்கள் மற்றும் அவர்களின் அடிவருடி சக்திகளின் கைகளில் குவிப்பதற்கே உதவுவதோடு அத்தகைய சக்திகள் ஆட்சிக்கு வருவதையே இது உத்திரவாதப்படுத்தும்.

இந்த நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் முறியடிக்கவேண்டுமானால் பொதுமக்களுக்கு அல்லது ஜனநாயக சிந்தனைகளையும் விழுமியங்களையும் கொண்டுள்ள எவர் முன்னாலும் இருக்கும் வாய்ப்பு ஒன்றுபட்ட, வலுவான, ஜனநாயக இயக்கங்களின் மூலம் அழுத்தம் கொடுப்பது மட்டுமே ஆகும். தாக்குதல்கள் பெருகும், எனவே அதற்கேற்றவாறு எதிர்ப்புகளும் உத்வேகமடைய வேண்டும். மார்க்சிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களும் இன்று வெறும் சமூக ஜனநாயக சக்திகளாக மாறி, தற்போதுள்ள பாராளுமன்ற ஜனநாயகத்திற்குள் தஞ்சமடைந்து விட்டதை மக்கள் பார்த்துவருகின்றனர். பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதான மரியாதையாலும் மதிப்பாலும் அவர்கள் ஆதரிக்கவில்லை ஏதாவது சாதகமான சூழ்நிலைமையில் அதிகாரமும் பதவியும் கிடைக்கும் என்பதற்காகவே இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர். இது வேதனையான ஒன்றுதான், ஆனால் இந்த சமூக ஜனநாயக சக்திகளெல்லாம் ஏற்கனவே மக்கள் முன்னால் அம்பலப்பட்டுவிட்டன. மக்கள் ஆதரவு சக்திகள் இத்தகைய பாழடைந்த தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்பது பிரயோஜனமற்றது, எனவே அத்தகைய தேர்தலைப் புறக்கணிப்பதே வழியென்ற வாதங்களையும் பொதுமக்கள் கேட்டிருக்கக் கூடும். இந்த வாதமே பிரயோஜனமற்றது பலனற்றது. ஏனெனில், பாராளுமன்ற நடைமுறைகளின் மாயையில் இன்னமும் மக்கள் வீழ்ந்து கிடக்கும் போது அதைப் புறக்கணித்தால் அதிகாரத்திற்காகவும் பதவிக்காகவும் ஏகபோகங்களுக்கு சேவகம் செய்யும் சக்திகளின் பிடியில் மக்களைத் தள்ளி விட்டுவிடும். இத்திட்டத்தை வகுக்கும் ஆட்சியாளர்கள்– அதாவது மக்களின் உண்மையான எதிரிகள்– தங்களது திட்டத்தை எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் எளிதாக நிறைவேற்றுவதற்கு இட்டுச் சென்றுவிடும்.

எனவே எதிர்ப்பு கட்டாயம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் இந்த திட்டங்களை எதிர்த்து முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய அனைத்து முயற்சிகளும் பிரதான எதிரியான தீய சக்தி முதலாளித்துவ அமைப்பை வேரோடும் வேரடி மண்ணோடும் அகற்றி தூக்கியெறிவதை நோக்கியதாகவும் இருக்கவேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்தசூழ்நிலைமை மக்களிடம் இந்த நேரத்தில் கோருவதும் இதைத்தான்.

# சோவியத் யூனியனின் (யுஎஸ்எஸ்ஆர்) வரைவு அமைப்புச் சட்டம் குறித்து மாபெரும் ஸ்டாலின்

2ம் பக்கத் தொடர்ச்சி

சமமான மதிப்புடையவையல்ல என்ற உண்மையையும் கருத்தில்கொண்டு பார்க்கையில், எனது கருத்துப்படி, அவைகள் மூன்று வகையாக பிரிக்கப்படவேண்டும்.

முதல் வகையில் திருத்தங்களின் பிரத்தியேக அம்சங்களானது அவை அமைப்புச் சட்டத்திற்குள்ளான கேள்விகளைக் குறித்தவை அல்ல என்பதாகும். ஆனால் அவை எதிர்கால சட்டமியற்றும் குழுக்களின் வழக்கமான சட்டப்பணிகளின் வரையறைகுட்பட்ட கேள்விகளை குறிக்கின்றன...

சோவியத் ஆட்சி எதை இன்னும் சாதிக்கவில்லையோ, எதிர்காலத்தில் எதை சாதிக்க வேண்டுமோ, அது குறித்து சரித்திரரீதியில் குறிப்பிடக்கூடிய அரசியலமைப்பு மூலக்கூறுகளினுள் அல்லது பிரகடனங்களின் மூலக்கூறுகளினுள் புகுத்திட முயற்சிக்கும் திருத்தங்களையும் சேர்க்கைகளையும் இரண்டாவது வகையாக பிரித்திட வேண்டும். ...அரசியலமைப்புச்சட்டத்துடன் நேரடித்தொடர்பு இல்லாதலால் இதுபோன்ற திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகளை ஒதுக்கித்தள்ள வேண்டும் என நான் எண்ணுகிறேன்...

மீதமுள்ள மூன்றாவது வகை திருத்தங்கள் மிகப்பெரும் முக்கியத்துவ முடையதாகும். அவைகள் குறித்து சில வார்த்தைகள் நான் சொல்லியாக வேண்டும். எனது கருத்துப்படி,

1) முதலில் வரைவுச் சட்டத்தின் பிரிவு 1ன் திருத்தங்கள் குறித்து. அவை நான்கு திருத்தங்களாகும். ..."தொழிலாளர்கள், விவசாயிகளுடைய அரசு" எனும் வார்த்தைகளை நாம் மாற்றவேண்டும்.. என்ற திருத்த முன்மொழிவு...

இந்த திருத்தங்களை நாம் ஏற்கவேண்டுமா? கூடாது என நான் நினைக்கிறேன்.

வரைவு அமைப்புச் சட்டப்பிரிவு 1 எதுகுறித்துப் பேசுகின்றது? சோவியத் சமூகத்தின் வர்க்க சேர்க்கைகள் (class composition) குறித்து அது பேசுகிறது. அமைப்புச் சட்டத்தில் நமது சமூகத்தின் வர்க்க சேர்க்கை குறித்த கேள்வியை மார்க்சிஸ்டுகளாகிய நாம் புறந்தள்ளிவிட முடியுமா? இல்லை, நம்மால் முடியாது. நமக்கு தெரிந்தவகையில், தொழிலாளர்கள், விவசாயிகள் என இரண்டு வர்க்கங்களை சோவியத் சமூகம் உள்ளடக்கியிருக்கிறது. இது குறித்துத்தான் வரைவு அமைப்புச் சட்டத்தின் பிரிவு 1 கூறுகிறது. ... உழைக்கும் அறிவுஜீவிகள் குறித்து ஏன் குறிப்பிடவில்லை என ஒருவர் கேட்கலாம். அறிவுஜீவிகள் ஒரு வர்க்கமே அல்ல, ஒரு வர்க்கமாக இருக்கவும் முடியாது... அது ஒரு சமுதாய படிநிலையாக இருந்தது, இருக்கிறது. அது சமூகத்தின் அனைத்து வர்க்கங்களிலிருந்தும் தனக்கு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்கிறது. அறிவுஜீவிப் பிரிவானது முந்தைய காலத்தில் அரச குடியிலிருந்தும் பூர்ஷ்வாக்கள், பகுதியளவு விவசாயிகள், மிகச்சிறிய அளவு தொழிலாளர்களிடமிருந்தும் தனக்கு உறுப்பினர்களை சேர்த்தது. தற்போதைய நாட்களில், சோவியத்துக்களின் கீழ், இந்த அறிவுஜீவிப் பிரிவானது பிரதானமாக தொழிலாளர்கள், விவசாயிகளிடமிருந்து உறுப்பினர்களை சேர்த்துக் கொள்கிறது. ஆனால் அது தன் உறுப்பினர்களை எங்கிருந்து சேர்த்துக்கொண்டாலும், அது எந்த குணாம்சத்தை கொண்டிருந்தாலும் அறிவுஜீவிப் பிரிவானது ஒரு பிரிவேயன்றி அது ஒரு வர்க்கம் அல்ல.

இவ்வாறான சூழ்நிலை உழைக்கும் அறிவுஜீவிகளின் உரிமைகளை பாதிக்குமா? கொஞ்சமுமில்லை! சோவியத் சமூகத்தின் பல்வேறு சமூகப்படிநிலைகளின் உரிமைகள் குறித்து வரைவு அமைப்புச் சட்டத்தின் பிரிவு 1 பரிசீலிக்கவில்லை. மாறாக, அச்சமூகத்தின் வர்க்க சேர்க்கைகள் குறித்து பரிசீலிக்கிறது. உழைக்கும் அறிவுஜீவிகளின் உரிமைகள் உட்பட, சோவியத் சமூகத்தின் பல்வேறு சமுகப்பிரிவுகளின் உரிமைகளை வரைவு அமைப்புச் சட்டத்தின் 10வது, 11வது அத்தியாயம் பிரதானமாக பரிசீலிக்கின்றன...

2) ...யூனியன் குடியரசுகளுக்கு சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரமாகப் பிரிந்துபோகும் உரிமையை வழங்கியிருக்கும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 17ஐ முழுவதுமாக நீக்கிடவேண்டுமென இத்திருத்தம் முன்மொழிகின்றது. இந்த முன்மொழிவு தவறானது, எனவே காங்கிரஸால் இது ஏற்றுக்கொள்ளப்படவே கூடாது என நான் நினைக்கிறேன். சோவியத் யூனியன் என்பது சம உரிமைகளுடன் யூனியன் குடியரசுகள் சுயவிருப்பத்துடன் இணைந்த ஒரு கூட்டமைப்பாகும். சோவியத் யூனியனிலிருந்து பிரிந்துசெல்லும் உரிமையை வழங்கும் இப்பிரிவை அமைப்புச் சட்டத்திலிருந்து நீக்குவதென்பது இந்த யூனியனின் சுயவிருப்ப குணாம்சத்தை மீறுவதாகிவிடும். இத்தகைய நிலையை நம்மால் ஒத்துக்கொள்ளமுடியுமா? இதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது, ஒத்துக்கொள்ளவும் கூடாது. சோவியத் யூனியனிலிருந்து பிரிந்துசெல்ல எந்த ஒரு குடியரசும் கூட விரும்பவில்லை, எனவே பிரிவு 17லானது நடைமுறையில் எவ்வித முக்கியத்துவமும் அற்றதாகிவிட்டது என சொல்லப்பட்டிருக்கிறது. உண்மைதான், கூறியுள்ளபடி, யுஎஸ்எஸ்ஆரிலிருந்து பிரிந்துசெல்ல விரும்பும் எந்த ஒரு குடியரசும் இல்லை. ஆனால் சோவியத் யூனியனிலிருந்து சுதந்திரமாக பிரிந்துசெல்லும் யூனியன் குடியரசுகளின் உரிமையை அமைப்புச் சட்டத்தில் நாம் நிர்ணயிக்கக் கூடாது என்று இதற்கு அர்த்தம் அல்ல...

3) இறுதியாக, ஏறக்குறைய பொருள்ரீதியான குணாம்சம் குறித்த மற்றுமொரு திருத்தம் உள்ளது. வரைவு அமைப்புச் சட்டத்தின் பிரிவு 135ஐ பற்றிய ஒரு திருத்தத்தை நான் குறிப்பிடுகிறேன். மதகுருக்கள், முன்னாள் வெண்படையினர்கள் (ஒயிட்கார்டுகள்), முந்தைய செல்வாக்கு மிகுந்தவர்கள் மற்றும் பணக்காரர்கள், சமூகரீதியாக பயனுள்ள வேலைகள் எதிலும் ஈடுபடாதவர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்படவேண்டும் அல்லது குறைந்தது தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டாலும் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை மறுக்கப்பட வேண்டும் என இது முன்மொழிகிறது. இத்திருத்தமும் நிராகரிக்கப்படவேண்டும் என நான் நினைக்கிறேன். சோவியத் ஆட்சியதிகாரமானது உழைக்காத, சுரண்டும் சக்திகளின் வாக்குரிமையை பறித்தது. ஆனால் நிரந்தரமாக அல்ல தற்காலிகமாக, குறிப்பிட்ட சில காலகட்டம்வரை மட்டுமே பறித்தது. இச்சக்திகள் மக்களுக்கு எதிராக வெளிப்படையான போரை தொடுத்த, சோவியத் சட்டங்களை செயற்திறனுடன் எதிர்த்த ஒரு காலம் இருந்தது. அதனால் அவ்வெதிர்ப்புக்கு பதிலடியாக வாக்களிப்பதிலிருந்து அவர்களை சோவியத் சட்டம் விலக்கிவைத்திருந்தது, அவ்வெதிர்ப்புக்கு சோவியத் ஆட்சி கொடுத்த பதிலடியாகும். இது நடந்து சிறிது நாட்கள் ஆகிவிட்டன. இந்த கால கட்டத்தில் சுரண்டும் வர்க்கங்களை அப்புறப்படுத்துவதில் நாம் வெற்றியடைந்தோம். சோவியத் ஆட்சியானது வெல்லமுடியாத ஒரு சக்தியாக ஆனது. இந்த சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கான நேரம் நமக்கு வரவில்லையா? வந்துவிட்டது என நினைக்கிறேன். இது மிகவும் அபாயகரமானது என சொல்லப்பட்டிருக்கிறது. சோவியத் ஆட்சியின் பகைவர்களான முன்னாள் வெண்படையினர் (ஒயிட்கார்டுகள்), குலாக்குகள், மதகுருக்கள் ஆகியோரில் சிலர் அரசாங்கத்தின் உயர் அமைப்புகளினுள் ஊடுருவி விடுவர் என்பதால் இது அபாயகரமானது என சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இதில் பயந்துகொள்ள என்ன இருக்கிறது? ஓநாய்களுக்கு பயந்தால் நீங்கள் காட்டுக்குள் செல்லக்கூடாது ...முதலில், முன்னாள் குலாக்குகள், வெண்படைனர் (ஒயிட்கார்டுகள்), மதகுருமார்கள் அனைவருமே சோவியத் ஆட்சிக்கு பகைவர்களல்லர். இரண்டாவதாக, சில இடங்களில் அவ்வாறான பகைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், அது நமது பிரச்சார வேலை அவ்வளவு மோசமாக இருந்திருக்கிறது என்பதை காட்டுகிறது, அந்த மானக்கேட்டை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். மேலும், நமது பிரச்சாரம் போல்ஷெவிக் வழியில் மேற்கொள்ளப்பட்டால் அப்பகைவர்கள் உயர் அரசாங்க அமைப்பிற்குள் நுழைந்திட மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்...

கிட்டத்தட்ட 5 மாதங்களாக நடைபெற்ற தேசந்தழுவிய விவாதங்களின் முடிவுகளை வைத்துப் பார்க்கும்போது, தற்போதைய காங்கிரஸால் இந்த வரைவு அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று யூகிக்கலாம்...

முதலாளித்துவ நாடுகளிலுள்ள லட்சக்கணக்கான நேர்மையான மக்கள் எதை கனவு கண்டார்களோ, இன்னும் கனவு கண்டு வருகிறார்களோ அதை யுஎஸ்எஸ்ஆர் ஏற்கெனவே அடைந்துவிட்டயதார்த்தத்தை நிரூபிக்கும் ஒரு ஆவணமாக அது (புதிய அமைப்புச் சட்டம்) திகழும்...

இன்று பாசிச காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் சோவியத் யூனியனின் புதிய அரசியலமைப்புச் சட்டம் தார்மீக உதவியையும் உண்மையான ஆதரவினையும் வழங்கும்.

...சோவியத் யூனியனின் புதிய அரசியலமைப்புச் சட்டமானது சோவியத் யூனியனின் மக்களுக்கு அதைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாகும்... முதலாளித்துவ நாடுகளின் மக்களுக்கு சோவியத் யூனியனின் அரசியலமைப்புச் சட்டம் செயல்திட்டத்தின் ஒரு முக்கியத்துவமாக இருக்கையில், சோவியத் யூனியனின் மக்களுக்கோ அவர்களின் போராட்டங்களின் தொகுப்பாக, மனிதஇனத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் அவர்களுடைய வெற்றியின் தொகுப்பாகத் திகழ்கிறது. ...நமது உழைக்கும் வர்க்கத்தை, நமது விவசாயிகளை, நமது உழைக்கும் அறிவுஜீவிகளை தார்மீக ரீதியில் இது ஆயுதந்தரிக்கச்செய்து அவர்களை முன்னேறிச் செல்ல இது தூண்டுகிறது. ...இது நமது பலத்தில் நம்பிக்கையை அதிகரித்து , கம்யூனிசத்தின் புதிய வெற்றிகளை அடைவதற்கான புதிய போராட்டங்களுக்கு நம்மை அணிதிரட்டுகின்றது.


**பாட்டாளி சிந்தனை**

**வருட சந்தா**

**ஏப்ரல் 01, 2017 முதல்**

**ரூ 70/-**


## சிரியா மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது – உலகளாவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திற்கு அறைகூவல்

*தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), ஏப்ரல் 7, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

சிரியா மீதான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாசகார காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் போர்வெறி பிடித்த ஏகாதிபத்தியங்கள் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்ற நாடுகளின் இறையாண்மையை எப்படி அழிக்கிறது என்பதையும் மனிதகுலத்திற்கும் நாகரீகத்திற்கும் எதிராக மனித–விரோத கொள்கைகளைக் கடைபிடிக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. உலக அமைதிக்கும் மனிதகுலத்திற்கும் மிகப்பெரும் எதிரியாக யுஎஸ் ஏகாதிபத்தியம் திகழ்கிறது. உண்மையான அமைதியை நேசிக்கும் மக்கள் இதற்கு எதிராக முன்வந்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த நாசகாரத் திட்டத்தை முறியடிக்க ஒன்றுபட்டு நிற்குமாறும் உலகம் முழுவதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டியெழுப்புமாறும் அறைகூவல் விடுக்கிறோம்.




ஏப்ரல் 08, 2017 அன்று கொல்கத்தாவில் நடந்த ஆர்ப்பாட்டம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# பழிவாங்கப்பட்டிருக்கும் மாருதி தொழிலாளர்களுக்கு ஆதரவாக மத்தியத் தொழிற்சங்கங்களின் அறைகூவல்

ஏஐயுடியுசி, ஐஎன்டியுசி, ஏஐடியுசி, ஹெச்எம்எஸ், சிஐடியு, டியுசிசி, எஸ்இடபிள்யுஏ, ஏஐசிசிடியு, எல்பிஎஃப் உள்ளிட்ட மத்திய தொழிற்சங்கங்கள் மார்ச் 2017, 25ஆம் நாளன்று விடுத்துள்ள கூட்டறிக்கையில், 2012ஆம் ஆண்டு மாருதி நிறுவனத்தின் மெனேசர் தொழிற்சாலையில், நிர்வாகத்தின் திட்டமிட்ட சதியால் நடத்தப்பட்ட வன்முறை தொடர்பாக, மாருதி சுசூகி நிறுவனத்தின் 13 தொழிலாளர்களுக்கு ஆயுள் தண்டனையும், நான்கு தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டதைக் கண்டு தங்களின் ஆழ்ந்த வருத்தத்தையும் வேதனையையும் வெளிப்படுத்தின. இதே தீர்ப்பில், 117 தொழிலாளர்களுக்கு விடுதலையும் 14 தொழிலாளர்களுக்கு அவர்கள் சிறையில் இருந்த காலத்தை அதுவே தண்டனையெனக் கருதப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அத்தொழிற்சாலையின் ஒரு பொது மேலாளர் கொலையில் முடிந்த அந்த 2012ம் வருட வன்முறையானது, தொழிற்சங்கங்களை நசுக்கிட ஏதுவான சூழ்நிலைமையை உருவாக்கிட மாருதி சுசூகி நிர்வாகத்தால் ஏவி விடப்பட்ட அடியாட்கள் மேற்கொண்ட சதி வேலையாகும். வெட்கமற்ற முறையில் அதிகார துஷ்பிரயோகம் செய்து, மாநில நிர்வாகத்தால், போலீஸ் மற்றும் ஆலை முதலாளி ஆகியோரின் கூட்டால் உருவாக்கப்பட்ட, புனையப்பட்ட தடயத்தின் பேரில், அச்சம்பவத்திற்கு எவ்வகையிலும் பொறுப்பாகாத தொழிலாளர்கள் தண்டனை பெற்றுள்ளனர். 546க்கும் மேலான முறைப்படுத்தப்பட்ட தொழிலாளர்களும் 2000 க்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களும் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டுள்ளனர். மேலும் 148 தொழிலாளர்கள் நான்கரை ஆண்டுகள் வரை சிறையில் தள்ளப்பட்டிருக்கின்றனர். இருந்த போதிலும், குர்காவ்ன் தொழிற்சாலைப் பகுதியில் தொழிற்சங்க இயக்கங்களை நசுக்கிடும் ஹரியாணா மாநில நிர்வாக மற்றும் முதலாளிகள் கூட்டின் கொடிய திட்டமானது நிறைவேறவில்லை. மார்ச் மாதம் 16 ஆம் தேதியன்று அப்பகுதியில் ஒரு லட்சத்திற்கும் மேலான தொழிலாளர்கள் மதிய உணவினை பகிஷ்கரித்து தன்னிச்சையாக அவர்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். குர்காவ்ன் – மெனேசரில் உள்ள மாருதி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் தொழிலாளர்கள் மார்ச் 18 ஆம் நாளது மாலை ஷிஃப்டில் ஒரு மணி நேரம் முழு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

குர்காவ்ன் தொழிற்சாலைப் பகுதியைச் சார்ந்த தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள் மார்ச் 23 நாளன்று, தண்டனையை எதிர்த்து வழக்கு தொடுப்பது உள்ளிட்ட, பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்திட மிகப்பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். 2012 வன்முறையை கண்டித்த அதே வேகத்துடன், அரசு மற்றும் முதலாளிகள் கூட்டின் அருவருக்கத்தக்க விளையாட்டினை மத்தியத் தொழிற்சங்கங்கள் கண்டித்ததுடன் உடனடியாக ஒன்றுபட்டு பதிலடி கொடுத்தமைக்காக தொழிலாளர்களுக்கு தங்களின் பாராட்டுக்களைத் தெரிவித்தன. அரசாங்கம் மற்றும் முதலாளிகளின் கூட்டுடன் நடத்தப்படும் இத்தகையை இழிவான நடவடிக்கைகளால், தொழிற்சங்க இயக்கங்களை அடிபணிய வைத்திட முடியாது என மத்தியத் தொழிற்சங்கங்கள் உறுதிபட தெரிவித்தன. மத்தியத் தொழிற்சங்கங்கள், மாருதி தொழிலாளர்களின் போராட்டத்திற்கும் மாருதி தொழிலாளர்களுக்கு ஆதரவாக குர்காவ்ன் தொழிற்சங்க கவுன்சில் பதாகையின் கீழ் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் எடுத்த முன்முயற்சிகளுக்கும் தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தின.

மத்திய தொழிற்சங்கங்களானது, சட்ட ரீதியிலான யுத்தம் உள்ளிட்ட, நீதிக்கான மாருதி தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக, எந்த சங்கத்தைச் சார்ந்திருக்கின்றோம் எனப் பாராது அனைவரும் முன்வருமாறு அனைத்து தொழிற்சங்கங்களையும் அறைகூவி அழைக்கின்றது. மேலும் மத்திய தொழிற்சங்கங்களானது, ஏப்ரல் 2017, 5ஆம் தேதியன்று, நீதிக்காகவும் தொழிற்சங்க உரிமைகளுக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் மாருதி தொழிலாளர்களுடான ஒற்றுமையின் அடையாளமாகவும், மாருதி தொழிலாளர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரியும், பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை வேலையில் மீண்டும் அமர்த்திடக் கோரியும், தொழிற்சங்க சார்பு பாராது, தங்களது பணியிடத்தில் அல்லது தொழில் மையங்களில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து நடத்திடுமாறு நாட்டின் அனைத்து தொழிற்சங்கங்களையும் அறைகூவியழைக்கின்றது.

ஏப்ரல் 13, 2017 அன்று தமிழ்நாட்டில் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து மாருதி சுசூகி தொழிலாளர்களுக்காக ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அதில் ஏஐயுடியுசி பங்கேற்றது.

# போராடும் தமிழ்நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்கவில்லை என்றால் இந்த கோரிக்கைக் குரலை நாடுமுழுதும் ஏஐகேகேஎம்எஸ் எழுப்பும் – தோழர் சத்யவான்

*(அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் (AIKKMS-ஏஐகேகேஎம்எஸ்) அகில இந்திய தலைவர் தோழர் சத்யவான் ஜந்தர் மந்தருக்கு இரண்டுமுறை நேரில் சென்று போராடிவரும் தமிழக விவசாயிகளுக்கு தனது போராட்ட வாழ்த்துகளையும் ஆதரவையும் தெரிவித்தார் அந்தச் செய்தியை கீழே தருகிறோம்)*

புதுடில்லி ஜந்தர்மந்தரில் போராடிவரும் தமிழக விவசாயிகளை ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய தலைவர் தோழர் சத்யவானும் சங்கத்தின் ஹரியாணா மாநில செயலாளர் ஜெய்கிரன் மன்டௌதியும் பீகார் மாநில செயலாளர் அசோக் குமார் சிங்கும் சந்தித்தனர். அவர்களுடன் கேகேஎம்எஸ்யை சார்ந்த பீஹார், ஹரியாணா மாநில விவசாயிகளும் உடனிருந்தனர்.

அவர்களின் கோரிக்கையைக் கேட்டறிந்து, பயிர்க் கடன் தள்ளுபடி, விளை பொருட்களுக்கான உரிய விலை நிர்ணயம், வறட்சி நிவாரணம் ஆகிய கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை என சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். அவற்றை வெளிப்படையாக ஆதரிப்பதாகவும் அறிவித்தார். காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய நியாயமான தீர்வை அவர் கோரினார். அதே சமயம் வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு உடனடி தீர்வை வழங்க வேண்டும் எனவும் வறட்சி நிவாரணத்துடன் மாற்று நீர் பாசன வசதிகளையும் செய்துதர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

போராடும் தமிழ்நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளை உடனே தீர்க்கவில்லை என்றால் இந்த கோரிக்கைக் குரலை நாடு முழுதும் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் எழுப்பும் என மத்திய மற்றும் தமிழ் நாடு மாநில அரசாங்கங்களுக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஜந்தர்மந்தர் பகுதியில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வேதனையையும் வலியையும் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் உணர்கின்றது. அவற்றை அவர்களுடன் நாம் முழுமையாக பகிர்ந்துகொள்ளும் அதேவேளையில், விவசாயத்திற்கான வங்கிக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், சரியான போதிய நீர்பாசன வசதிகளை செய்து தரவேண்டும், விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகும் விலையை நிர்ணாயிக்க வேண்டும் ஆகிய அவர்களின் மிகவும் நியாயமான கோரிக்கைகளையும் நாங்கள் முழுமையாக ஆதரிக்கின்றோம். மாநிலங்களுக்கிடையே நதி நீரைப் பாசன வாய்க்கால்களில் நியாயமாகப் பங்கிட்டுக்கொள்ளும் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் அறிவியல்பூர்வ தேசிய நதிநீர் கொள்கையை வடிவமைக்க வேண்டும் என்றும் நாங்கள் கோருகிறோம். இத்தகைய கொள்கை, வறட்சியையும் பாலைவனம் போன்ற சூழலையும் சந்திக்கும் விவசாய சமூகத்தினரின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் தேவையாக இருக்கின்றது.

அதே போன்று, போராடும் அனைத்து மாநில மக்களின் ஒற்றுமையையும் குறிப்பாக தற்கொலைகளை நோக்கித் தள்ளப்படும் துரதிருஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகளின் ஒற்றுமையையும் உருவாக்க இத்தகைய கொள்கை அவசியமாகும்.

போராடிவரும் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவாக இன்று, நமது சங்கத்தின் அகில இந்திய



ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய தலைவர் தோழர் சத்யவான் ஜந்தர் மந்தருக்கு சென்று போராடிவரும் தமிழக விவசாயிகளுக்கு தனது போராட்ட ஆதரவை தெரிவித்தார்

தலைவர் சத்யவான் மற்றும் உப தலைவர் அனூப் சிங் ஆகியோரின் தலைமையில் சங்கத்தின் ஹரியாணா மாநிலத்தின் பல மாவட்ட விவசாயிகள் அவர்களுடன் இணைந்து அமர்ந்துள்ளோம். தமிழக விவசாயிகளின் மேற்குறிப்பிட்ட மிகவும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்றும் அவர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கவேண்டும் என்றும் மத்திய மோடி அரசாங்கத்தையும் தமிழ்நாடு மாநில அரசாங்கத்தையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**